தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மக்களை வாட்டி வதைத்த கத்திரி வெயில் இன்றுடன் விடைபெறுகிறது



**சென்னை,**

தமிழகத்தில் கடந்த ஒரு மாதமாக பொதுமக்களை வாட்டி வதைத்த கத்திரி வெயிலின் தாக்கம் புதன்கிழமையுடன் (மே 28) நிறைவடைகிறது.

அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் கடந்த மே 4-ஆம் தமிழகத்தில் தொடங்கியது. கோடை காலத்தில் வெயிலின் தாக்கம் அதிகம் காணப்படும் நிலையில் கத்திரி வெயில் காலத்தில் மேலும் வெயிலின் உக்கிரம் உணரப்படும். இந்த நிலையில் புதன்கிழமையுடன் கத்திரி வெயில் காலம் நிறைவடைகிறது.

மழையுடன் தொடங்கிய கத்திரி: கத்திரி வெயில் தொடங்கி கடுமையான வெயில் வாட்டும் என்று நினைத்திருந்த வேளையில், கத்திரி வெயில் தொடங்கிய நாளில் இருந்து தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. தொடர்ந்து சில நாள்கள் பெய்த தொடர் மழையால், கத்திரி வெயிலின் தாக்கம் அப்போது முழுமையாக உணரப்படவில்லை.

அதன் பின்னர் மழை குறைந்து வெயில் கொளுத்த ஆரம்பித்தது.

தமிழகம் முழுவதும் பல இடங்களில் 100 டிகிரி பாரன்ஹீட்டுக்கு அதிகமாக வெயில் பதிவானது.

வெயிலுடன் சேர்ந்து அனல் காற்றும் வீசியதால், இருசக்கர வாகன ஓட்டிகளும், பாதசாரிகளும் பெரும் சிரமத்துக்குள்ளாகினர்.

உள்ளே மழை வெளியே வெயில்: கத்திரி வெயில் தொடங்கியதில் இருந்து கடலோர மாவட்டங்களைக் காட்டிலும் உள்மாவட்டங்களான சேலம், தருமபுரி, திருச்சி, வேலூர் ஆகிய இடங்களில் கடுமையான வெயில் நிலவியது. அதேவேளையில் சென்னை, கடலூர், நாகப்பட்டினம் போன்ற கடலோர மாவட்டங்களில் சற்று குறைவாகவே வெயிலின் தாக்கம் உணரப்பட்டது.

ஆனால் கத்திரி வெயிலின் பிற்பாதியில், உள்மாவட்டங்களை விட கடலோர மாவட்டங்களில் வெப்பம் அதிகரித்தது. தமிழகத்தின் மற்ற இடங்களை விட சென்னையிலேயே அதிகபட்ச வெப்பம் பதிவாகியது. கடந்த மே 23-ஆம் தேதி, 10 ஆண்டுகளில் இல்லாத அளவு சென்னையில் 110 டிகிரி வெயில் பதிவானது.

மேலும் கடலோர பகுதிகளில் வீசிய அனல் காற்றும் பொதுமக்களை கடுமையான இன்னலுக்கு உள்ளாக்கியது.

இக்காலக்கட்டத்தில் வெப்ப சலனத்தின் காரணமாக உள்மாவட்டங்களில் மழை பெய்து வெப்பத்தை ஓரளவு தணித்தது. ஆனால் கடலோர பகுதிகளில் வெப்பசலன மழை பெய்யவில்லை.

சென்னையிலேயே அதிகம்: இந்தாண்டு கத்திரி வெயிலின் போது சென்னையில் அதிகபட்ச வெயில் பதிவானது.

கடந்த மே 23-ஆம் தேதி 110 டிகிரி வெயில் பதிவானது.

அதற்கு அடுத்தபடியாக, வேலூரில் மே 16-ஆம் தேதி 108 டிகிரி வெயில் பதிவானது.

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கவுள்ள நிலையில் தமிழகத்தில் இனி வரும் நாள்களில் வெப்பம் படிப்படியாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மே 4 முதல் 27-ஆம் தேதி வரை பதிவான அதிகபட்ச வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்):

நகரம் அதிகபட்சம் தேதி

சென்னை 110 மே 23

கோவை 101 மே 4

வேலூர் 108 மே 16

திருச்சி 105 மே 12,17,20, 23

சேலம் 104 மே 16

மதுரை 104 மே 18

செவ்வாய்க்கிழமை பதிவான வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்):

கரூர் பரமத்திவேலூர் - 103

சென்னை, திருச்சி - 102

வேலூர் - 101

சேலம் - 100

மதுரை - 99

தருமபுரி - 98

கோவை – 95

## பல்லடம் கறிக்கோழி கொள்முதல் விலை உயர்வு

**பல்லடம்,**

பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. திங்கள்கிழமை கொள்முதல் விலை கிலோ ரூ.60 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் செவ்வாய்க்கிழமை கொள்முதல் விலை கிலோ ரூ.65 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.2.95, சென்னையில் ரூ.3.30.

## காய்கறிகளுக்கு செஸ் வரி செலுத்தாத வியாபாரிகள் மீது நடவடிக்கை: ஆட்சியர் எச்சரிக்கை

**உதகை,**

நீலகிரி மாவட்டத்தில் விளையும் காய்கறிகளை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லும்போது செலுத்தவேண்டிய செஸ் வரியை செலுத்தத் தவறும் வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்துள்ளதாவது:

நீலகிரி மாவட்டத்தில் 8 ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமான நிலப்பரப்பில் காரட், உருளைக்கிழங்கு, பீன்ஸ், பீட்ரூட், முட்டைகோஸ், காலிபிளவர், பூண்டு, வாழைக்காய், இஞ்சி, ஏலக்காய், ஆரஞ்சு, நெல், நூல்கோல் உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களுக்கும் விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

வேளாண் விளைபொருள்களை பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும் வியாபாரிகள் தாங்கள் கொண்டு செல்லும் மொத்த காய்கறிகளின் மதிப்பில் 1 சதவீதத்தை வேளாண்மை விற்பனைக் குழுவிற்கு மேல் வரியாக (செஸ்) செலுத்த வேண்டும். எனவே, வியாபாரிகள் அனைவரும் உதகை, என்சிஎம்எஸ் வளாகத்தில் அமைந்துள்ள நீலகிரி மாவட்ட வேளாண் விற்பனைக்குழு அலுவலகத்தை தொடர்பு கொண்டு உரிய மேல் வரி செலுத்தி ரசீதுடன் காய்கறிகளை எடுத்துச் செல்ல வேண்டும். வாகன சோதனையின்போது, மேல் வரி செலுத்தாத வியாபாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நீலகிரி மாவட்ட விவசாயிகள் தங்கள் விளை பொருள்களை விற்பனை செய்ய மேல் வரி செலுத்த தேவையில்லை. விவசாயிகள் தங்கள் விளை பொருள்களை எடுத்துச் செல்ல சாகுபடி செய்யப்பட்ட பயிர் மற்றும் பரப்பு விவரங்களை உதகை, குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் பகுதிகளிலுள்ள உழவர் சந்தைகளில்

காண்பித்து மேல் வரி இலவச அனுமதி சீட்டினை பெற்றுக் கொள்ளலாம். தற்போது அறுவடைப் பருவமாக இருப்பதால் ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் விவசாயிகள் இச்சீட்டினை பெற்று பயனடையலாம்.

ஜூன் 15-ஆம் தேதிக்கு பின்னர் வாகன ஆய்வின்போது, தங்களது அடையாள மேல் வரி இலவச அனுமதிச் சீட்டை காண்பிக்காத விவசாயிகள், வியாபாரிகளாகக் கருதப்பட்டு மேல் வரி வசூல் செய்யப்படும்.

மேலும், இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு நீலகிரி விற்பனைக்குழு அலுவலக தொலைபேசி எண் 2450477, செயலரின் தொடர்பு எண் 76397 02337 மற்றும் கண்காணிப்பாளரின் அலுவலக எண் 98654 30971 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம்.

## <u>மாரண்டஹள்ளியில்17 மி.மீ மழை</u>

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டம், மாரண்டஹள்ளியில் திங்கள்கிழமை இரவு 17 மி.மீட்டர் மழை பெய்தது.

தருமபுரியில் கடந்த சில நாள்களாக பகல் நேரங்களில் வெயிலும், இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழையும் பெய்து வருகிறது.

இதில், திங்கள்கிழமை இரவு 9.30 மணியளவில் திடீரென இடி, மின்னலுடன் மழை பெய்தது.

சுமார் ஒரு மணி பரவலாக மழை தொடர்ந்து பெய்தது.

தருமபுரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு (மி.மீ.): தருமபுரி-16, மாரண்டஹள்ளியில்-17. சராசரி மழையளவு 4.71 மி.மீ ஆகும்.

## <u>மேட்டூர் அணையின் மதகுகள் பராமரிப்புப் பணிகள் தொடக்கம்</u>

**மேட்டூர்,**

மேட்டூர் அணையில் மதகுகளைப் பராமரிக்கும் பணி தொடங்கியுள்ளது.

ஆண்டுதோறும் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக மேட்டூர் அணையில் மதகுகள் பராமரிப்புப் பணிகள் நடைபெறும். அணையின் மேல்மட்ட மதகுகள், கீழ்மட்ட மதகுகள், அணை மின் நிலைய மதகுகள், உபரிநீர்ப் போக்கி மதகுகள் பராமரிக்கப்படும்.

நிகழாண்டுக்கான மதகுகள் பராமரிப்பு பணிகள் தொடங்கியுள்ளது. தற்போது கீழ்மட்ட மதகுகள் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. கீழ்மட்ட மதகுகளில் முதல் மதகு பழுதாகி இருப்பதால், அதற்கு மாற்றாக புதிய மதகு அமைக்கும் பணி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஜூன் முதல் வாரத்துக்குள் இந்தப் பணிகள் நிறைவடையும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மே 30-ல் வெண் பன்றி வளர்ப்பு பயிற்சி

**கரூர்,**

கரூர் பண்டுதகாரன்புதூரில் வரும் 30-ம் தேதி வெண் பன்றி வளர்ப்பு பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் ந. அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஆராய்ச்சி மையத்தில் வரும் 30-ம் தேதி நடைபெற உள்ள வெண் பன்றி வளர்ப்பு பயிற்சி முகாமில், வெண் பன்றி வளர்ப்பு, கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள், பண்ணைப் பொருளாதாரம் போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படும்.

இத்துடன் களப்பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் சேர விரும்புவோர் 04324-294335 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## தஞ்சை மாவட்டத்தில் பலத்த காற்றுடன் மழை: கோடை உழவுக்கு சாதகம் என விவசாயிகள் கருத்து

**தஞ்சாவூர்,**

தஞ்சாவூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை நள்ளிரவு பலத்தக் காற்றுடன் மழை பெய்தது. மாவட்டத்தில் மே மாத முதல் வாரத்தில் தொடர்ந்து மழை பெய்தது. அதன் பிறகு கடும் வெப்பம் நிலவி வந்தது. ஏறத்தாழ 20 நாள்களாக வெப்பத்தின் தாக்கம் கடுமையாக இருந்து வந்த நிலையில் திங்கள்கிழமை நள்ளிரவு மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. இந்த மழை செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை நீடித்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக அணைக்கரையில் 61 மி.மீ. மழையளவு பதிவானது. சற்று பலமான காற்றுடன் மழை பெய்ததால் சில இடங்களில் மரங்கள் சாய்ந்து விழுந்ததன. மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): அணைக்கரை 61, கும்பகோணம் 57, பாபநாசம் 48, கல்லணை 47.6, திருவையாறு 47, அய்யம்பேட்டை 37, வல்லம் 34.8, திருவிடைமருதூர் 32, அதிராம்பட்டினம் 27.4, தஞ்சாவூர் 24.2, குருங்குளம், ஒரத்தநாடு தலா 21, நெய்வாசல் தென்பாதி 14, வெட்டிக்காடு 13, திருக்காட்டுப்பள்ளி 11.4, மதுக்கூர் 7.8, மஞ்சலாறு 6.4, பட்டுக்கோட்டை 3, பூதலூர் 1.8. இந்த மழையால் மாவட்டத்தில் சாகுபடி நிலங்கள் ஈரமாக வாய்ப்புள்ளதால் கோடை உழவு செய்வதற்குச் சாதகமாக இருக்கிறது. மேலும், கோடை நெல் பயிரிடப்பட்டுள்ள நிலங்களுக்கும், எள், பயறு வகைப் பயிர்கள் உள்ளிட்டவற்றுக்கும் இந்த மழை பயனுள்ளதாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர். அதேநேரம், காற்றுடன் பெய்த மழையால் சில இடங்களில் மக்காச்சோளப் பயிர்கள் சாயந்துவிட்டதாகவும் விவசாயிகள் கூறினர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 37.35 அடி

**தஞ்சாவூர்,**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 37.35 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 2,234 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 753 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## குத்தாலம் விவசாயிகளுக்கு 50% மானியத்தில் உரம்: வேளாண் அதிகாரி தகவல்

**குத்தாலம்,**

குத்தாலம் வட்டார விவசாயிகளுக்கு 50% மானியத்தில் உரம் வழங்கப்படுகிறது என வட்டார வேளாண் உதவி இயக்குநர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

குத்தாலம் வட்டாரத்தில் தற்போது நிலத்தடி நீரைக் கொண்டு குறுவை நடவு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், அடியுரமாக தழைச்சத்து, மணிச்சத்து, சம்பல்சத்து ஆகிய பேரூட்ட சத்துக்கள் இடுவதோடு, நெல் பயிருக்கு மிகவும் முக்கியமாக தேவைப்படும் நுண்ணூட்டச் சத்தான துத்தநாகச் சத்தையும் இடவேண்டும். துத்தநாக சத்து பற்றாக்குறை ஏற்பட்டால், நெற்பயிர் வளர்ச்சி குன்றி கட்டையாகவும், சமமற்ற உயரமுள்ள பயிராகவும், தூர் எண்ணிக்கை குறைந்தும் காணப்படும். அடி இலைகளின் நரம்பு பகுதிக்கு இடைப்பட்ட பகுதி வெளுத்து காணப்படும். இலைகளில் பழுப்பு நிறப்புள்ளிகளும், கோடுகளும் ஏற்பட்டு, இலையின் அளவு சுருங்கிவிடும். பயிரை பார்ப்பதற்கு துருப்பிடித்தது போல தெரியும். முடிவில் இலைகள் காய்ந்து பயிர் வளர்ச்சி நின்றுவிடும். இதனால், மகசூல் பாதிப்பு ஏற்படும். எனவே, துத்தநாக சத்து பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க நடவு வயலில் ஏக்கருக்கு 10 கிலோ நன்கு பொடி செய்யப்பட்ட சிங்சல்பேட் உரத்தை 20 கிலோ மணலுடன் கலந்து நடவுக்கு முன்பாக மேலாக தூவி நடவு செய்ய வேண்டும். இந்த உரத்தை மண்ணில் இட்டபிறகு உழவு செய்யக் கூடாது. விவசாயிகளுக்கு சிங்சல்பேட் உரம் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 50 சதவீத மானியத்தில் குத்தாலம், பாலையூர், கோமல், மங்கநல்லூர் ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்களில் வழங்கப்படுகிறது. இதன்மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர் அல்லது வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

## கார் பருவ சாகுபடிக்கு மணிமுத்தாறு அணை ஜூன் 1இல் திறப்பு

**திருநெல்வேலி,**

கார் பருவ சாகுபடிக்கு மணிமுத்தாறு அணையில் இருந்து ஜூன் 1-ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன்மூலம் பெருங்கால் பாசனத்தில் 2,700 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என தாமிரவருணி பாசன செயற்பொறியாளர் ம. முத்துப்பாண்டியன் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். தாமிரவருணி வடிநில

பாசனத்தில் கார், பிசான பருவம் ஆகிய இரு பருவம் சாகுபடி செய்யப்படுகிறது. ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை கார் பருவமும், நவம்பர் மாதம் தொடங்கி மார்ச் மாதம் வரை பிசான பருவ சாகுபடியும் மேற்கொள்ளப்படுகிறது. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பாபநாசம் அணையில் 11 கால்வாய்கள் மூலம் 86,107 ஏக்கர் நிலங்களும், மணிமுத்தாறு அணையில் பிரதான கால்வாய் மூலம் 25,434 ஏக்கர் நிலங்களும், பெருங்கால் மதகு மூலம் 2,700 ஏக்கர் நிலங்களும் பாசனவசதி பெற்று வருகின்றன. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 80 அடிக்கு அதிகமாக இருந்தால்தான் பிரதான கால்வாய் மூலம் பாசனம் பெறும் முதல், 2 மற்றும் 3,4ஆவது ரீச் குளங்களுக்கு தண்ணீர் திறந்துவிட முடியும். பெருங்கால் பாசனத்துக்கு 40 அடிக்கு அதிகமாக நீர் இருப்பு இருந்தால் திறக்கப்படும். மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 67.59 அடியாக இருந்தது. அணைக்கு 3 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் பெருங்கால் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு ஜூன் முதல் தேதியில் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதன்மூலம் மணிமுத்தாறு, ஜமீன்சிங்கம்பட்டி, அயன்சிங்கம்பட்டி, தெற்கு பாப்பான்குளம், தெற்கு கல்லிடைக்குறிச்சி, பொட்டல் பகுதியில் 2,700 நிலங்கள் பாசனம் பெறுகிறது. நிகழாண்டு கார் பருவ சாகுபடிக்காக மணிமுத்தாறு அணை ஜூன் 1ஆம் தேதி திறக்கப்படுகிறது. இதுகுறித்து தாமிரவருணி வடிநில கோட்ட செயற்பொறியாளர் ம. முத்துப்பாண்டியன் செவ்வாய்க்கிழமை கூறியதாவது: மணிமுத்தாறு அணையில் பெருங்கால் மதகு மூலம் பாசனம் பெறும் 2,700 ஏக்கர் நிலங்களுக்கு ஜூன் 1-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 51 அடியாக உள்ளது. அணையின் நீர்மட்டம் உயர்ந்தால்தான் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். இம்மாத இறுதியில் தென்மேற்குப் பருவமழை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணையின் நீர்வரத்தைப் பொறுத்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் என்றார் அவர்.

அணைகளின் நீர்இருப்பு: செவ்வாய்க்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 51.30 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 163.77 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக 204.75 கனஅடி திறந்துவிடப்படுகிறது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 64.86 அடியாகவும்,

கடனாநதி அணையின் நீர்மட்டம் 57.65 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 63.50 அடியாகவும் இருந்தது.

விவசாயிகள் கோரிக்கை: பாபநாசம் அணையிலிருந்து வழக்கமாக ஜூன் முதல் தேதியில் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடப்படும். அணையின் நீர்மட்டம் 30 அடியாக இருந்த சமயத்திலும் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது அணையின் நீர்மட்டம் 51 அடியாக உள்ளதால், பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் 120 மி.மீ. மழை

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்டத்தில் 120 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாக இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. திங்கள்கிழமை இரவு 8 மணி முதல் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை பெரம்பலூர் - 66 மி.மீ, பாடாலூர்- 7 மி.மீ, செட்டிக்குளம்- 21 மி.மீ, வேப்பந்தட்டை- 22 மி.மீ, தழுதாழை- 4 மி.மீ என, மொத்தம் 120 மீல்லி மிட்டர் மழையும், சராசரியாக 24 மீட்டர் மீட்டர் மழை பெய்தது.

## திருவாரூரில் நாளை கோழி வளர்ப்பு இலவச பயிற்சி

**திருவாரூர்,**

திருவாரூர் விளமல் குறிஞ்சி நகரில் செயல்படும் உழவர் பாதுகாப்பு மையத்தில் கோழி வளர்ப்புப் பயிற்சி முகாம் வியாழக்கிழமை (மே 29) நடைபெற உள்ளது. இதுகுறித்து மைய இணைப் பேராசிரியர் மா. கதிர்செல்வன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக உழவர் பயிற்சி மையத்தில் மே 29, 30 ஆகிய இரு நாட்கள் கோழி வளர்ப்புப் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. இலவசமாக நடத்தப்படும் இப்பயிற்சியில் கோழி இனங்கள், கொட்டகை அமைக்கும் முறை, தீவன பராமரிப்பு, நோய்த் தடுப்பு மற்றும் பண்ணைப் பொருளாதாரம் ஆகிய தலைப்புகளில் பயிற்சி நடைபெறுகிறது.

இதில் கோழி வளர்ப்பு ஆர்வலர்கள் பங்கேற்று பயன்பெறலாம். காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை பயிற்சி வகுப்பு நடைபெறும்.

## மே 30-ல் மீனவர் குறைதீர் கூட்டம்

**நாகர்கோவில்,**

நாகர்கோவிலில் மீனவர் குறைதீர்க்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை (மே 30)நடைபெறுகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாகர்கோவிலில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நாஞ்சில் கூட்ட அரங்கில் மே 30ஆம் தேதி காலை 11 மணிக்கு மீனவர் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும். மீன்வளத் துறை மற்றும் இதர அரசுத் துறைகளால் நிறைவேற்றப்பட வேண்டிய மீனவர்களின் குறைகள், கோரிக்கைகள், தேவைகள் அடங்கிய மனுக்களை குறைதீர்க்கும் கூட்டத்தில் நேரில் வழங்கலாம். பிற அரசுத்துறைகள் சார்ந்த கோரிக்கைகளை ஒரே மனுவாக கொடுக்காமல், துறைவாரியாக தனித்தனி மனுக்களாக வழங்க வேண்டும். மே 30 ஆம் தேதி பெறப்படும் மனுக்களை சம்பந்தப்பட்ட பிற அரசுத்துறை அலுவலர்களுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரம் அடுத்த மீனவர் குறை தீர்க்கும் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் என்றார் அவர்.

## 30-ல் கால்நடைகளுக்கான குடற்புழு நீக்கும் முகாம்

**விழுப்புரம்,**

தமிழக அரசின் மூலம் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகள் மற்றும் பசுக்களுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்கும் முகாம் வரும் மே 30 மற்றும் மே 31 ஆகிய இரு நாள்கள் நடைபெறுகிறது. இது குறித்து ஆட்சியர் வா.சம்பத் வெளியிட்ட செய்திக்குறிப்பு: விழுப்புரம் மாவட்டத்தில் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற உள்ளது. தமிழகம் முழுவதும் மே 30, மே 31 ஆகிய இரு நாள்களில் இனப்பெருக்க மருத்துவ

பரிசோதனையும், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெறும். இந்த வாய்ப்பை விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்ட பயனாளிகள், அனைத்து விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கொடியில் வளரும் கோவைக்காய்**



கோவைச்செடியை "பிம்பி' (Bimbi) என்று ஆங்கிலத்தில் அழைப்பர். இதற்கு விம்பம், தொண்மை, கொவ்வை என்ற பெயர்களும் உண்டு. இதன் தாவரப்பெயர் காக்கினியா இண்டிகா (Coccinea Indica) ஆகும். இதற்கு செபளாண்ட்ரா இண்டிகா (Cabhalandra Indica) என்ற பெயரும் உண்டு. இதன் காய்கள் பச்சையாகவும் பழம் சிவப்பாகவும் இருக்கும். சிவப்பு நிறத்தின் சிறப்பினைச் சொல்ல கோவைப்பழம் உதவுகிறது. பெண் செடியின் கிளைத்துண்டுகள் விதைகளாகப் பயனாகின்றன. வேர்க்கிழங்குகளையும் விதைக்கப்

பயன்படுத்தலாம். கோவைக்காய் தமிழகத்தில் குறிப்பாக செங்கல்பட்டு மாவட்டத்தில் வணிக முறையில் உற்பத்தியாகின்றது. ஜூன்- ஜூலையில் 15 செ.மீ நீள பெண் கொடித்தண்டுகளை நடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. 10% ஆண் கொடித்தண்டுகளையும் நடுதல் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும். சாகுபடியாகும் இது 6 மாதங்களில் அறுவடைக்கு வரும். ஆனால் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலும் நிறைந்த மகசூலைப் பெறலாம். காய்களில் கசப்பு, இனிப்பு இரகங்கள் உள்ளன. கோவைக்காயின் மணம், ருசி ஆகியவற்றிற்காக சிலர் இதனை விரும்புவதுண்டு. கோவைக்காயைக் குறுக்காக அரிந்து கறியாக சமைத்துண்ணலாம். ஒரு ஆண்டுக்கு ஒரு கொடியிலிருந்து 500 - 600 காய்கள் வரை கிடைக்கும். ஒரு எக்டரிலிருந்து 40,000 கிலோ காய்கள் கிடைக்கும். கோவைக்காய் முற்றி பழுத்தபின் அப்பழங்களை உண்ணலாம். பழம் இனிப்பாக இருக்கும். காடுகளில் படர்ந்து வளரும்.

கோவைக்கொடியில் உண்டாகியிருக்கும் பழங்கள் பறவைகளுக்கும் குறிப்பாக கிளிகளுக்கும் ஆடு, மாடு மேய்ப்பவர்களுக்கும் நல்ல உணவு ஆகவும் அமைந்துள்ளது. காயை வற்றலாகவும் ஊறுகாய் செய்தும் சாப்பிடலாம். சத்துக்கள்: நூறு கிராம் கோவைக்காயில் பலவித சத்துக்கள் உள்ளன. அவை. புரதம் 1.2, கொழுப்பு 0.1, நார்ப்பொருள் 1.6, மாவுப்பொருட்கள் 3.1, கால்சியம் 40மி.கி பாஸ்பரஸ் 30மி.கி, இரும்பு 1.4மி.கி, ரைபோபிளேவின் 0.08மி.கி, நியாசின் 0.07மி.கி, தயமின் 0.07மி.கி, வைட்டமின் "சி' 15மி.கி, போலிக் அமிலம் 59 மைக்ரோகிராம், கரோட்டின் 156 மைக்ரோகிராம், சக்தி 18 கிலோ கலோரிகள். மருத்துவப்பண்புகள்: காய்களைச் சமைத்துண்ண குளிர்ச்சியைத் தரும். குட்டத்தை போக்கும். காசநோயைப் போக்கும். இளங்காயை வாயிலிட்டு மென்று சப்பிவர நாக்கு புண்கள் நீங்கும். கோவைக்காயை சிறுநீர்க்கோளாறு உடைய நோயாளிகள் அடிக்கடிப் பயன்படுத்தலாம். காயைச் சமைத்து உண்ண அருசி போகும். நாக்கிலுள்ள வெடிப்பு, வாய்ப்புண், நாக்குப்புண் நீங்கும். குமட்டல் விலகும்.

இதற்கு காயை மோரில் ஊற வைத்து வற்றலாகச் செய்து பொரித்தும் ஊறுகாய் செய்தும் சாப்பிடலாம்.

வேர் மற்றும் இலைச்சாறு, நீரிழிவு நோய்க்குப் பயன்படுவதாக எண்ணுகிறார்கள். கிழங்குகளைச் சுத்தம் செய்து குறுக்காக சிறுசிறு துண்டுகளாக்கி மிளகுத்தூளில் தொட்டு உண்ண மேற்கூறிய நோய்கள் போகும். கிழங்குச்சாற்றை 1-3 கரண்டி தர நீரிழிவு படை போகும்.வேரை உலர்த்திப் பொடி செய்து 30 கிராம் அளவில் தர மலத்தை இளக்கும். நல்லெண்ணையையும் இலைச்சாற்றையும் சமஅளவில் சேர்த்துக் சொறி, சிரங்கு, படை, கரப்பானுக்குத் தடவ புண்கள் குணமாகும். உடலில் பூசி தலைமுழுகி வர உட்சூடு தணியும். இலையைக் கொப்புளங்களின் மீது ஒட்டவைத்தால் கொப்புளங்கள் அழுந்தி நாளடைவில் மறையும். இலையை நறுக்கி தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி குடிநீராக்கி உள்ளுக்குத் தர மேகவெட்டை நீங்கும். உடல்சூடு தணியும். கண்ணெரிச்சல், இருமல், நீரடைப்பு, சொறி, சிரங்கு, புண் குணமாகும். விக்கலை நிறுத்தும், கோழையை அகற்றும், தோல் நோய்கள் போகும்.

கோவை இலையை சிறுசிறு துண்டுகளாக அரிந்து அத்துடன் இரண்டு பங்கு தண்ணீர் சேர்த்து, சட்டியிலிட்டு சரிபாதியாகக் காய்ச்சி தினம் இரண்டுவேளை இச்சாற்றைக் குடித்துவர கண் எரிச்சல், இருமல் நீங்கும். இலைகளை உலர்த்தித் தூளாக்கி தினம் இரண்டு சிட்டிகை வெற்றிலையில் கலந்து சாப்பிடலாம். பூக்கள் அரிப்பையும், பித்த மயக்கத்தையும் போக்கும். காமாலைக்கு நல்லது.

எனவே கோவைக்காயை எங்கு கிடைத்தாலும் வாங்கி பயன்படுத்த இன்றே திட்டமிடுவோம் வாரீர்!

இது குறித்து மேலும் விபரம் பெற டாக்டர் பா.இளங்கோவன், அலைபேசி எண். 98420 07125 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## சின்ன சின்ன செய்திகள்



**முறையான பால் கறக்கும் முறைகள்** :பொதுவாக கறவை மாடுகளில் பால் கறப்பதற்கு அனைத்து விரல்களையும் பயன்படுத்தி பால் கறத்தல், கட்டை விரலினை உட்புறமாக மடக்கி கறத்தல், கட்டை விரல், ஆள்காட்டி விரல்களை மட்டும் பயன்படுத்தி கறத்தல் ஆகியமுறைகளில் பால் கறக்கப்படுகிறது. பிற முறைகளை ஒப்பிடும் போது அனைத்து விரல்களையும் பயன்படுத்தி கறக்கும்முறை மிகவும் சிறந்ததாகும். இம்முறையில் பால்காம்புகளுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

மடிநோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளில் இறுதியாக பால் கறப்பதின் மூலம் பிற கால்நடைகளுக்கு நோய் பரவுவதை தடுக்க முடியும். பால் கறவைக்கு முன்னால் கறவையாளர்கள் தங்கள் இரு கைகளையும் சோப்பு கொண்டோ அல்லது கிருமி நாசினி கலந்த தண்ணீர் கொண்டோ கழுவ வேண்டும். பால் கறவை இயந்திரங்களைப் பயன்படுத்துவோர் இயந்திர தயாரிப்பாளர்களின் பரிந்துரை செய்யும் தொழில்நுட்ப ஆலோசனைகளை முறையாக பின்பற்ற வேண்டும். மடி நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளில் பால்கறக்க கறவை இயந்திரங்களை பயன்படுத்தக்கூடாது. இவ்வாறு பயன்படுத்தும் போது பாதிக்கப்பட்ட கால்நடைகளில் மடிகளில் வலி உண்டாவதுடன் பால் கறவை இயந்திரம் அசுத்தப்பட வாய்ப்புள்ளது. கறவை மாடுகளில் தினசரி இரண்டு கறவைகளுக்கு இடையேயான இடைவெளி சமமாக இருக்க வேண்டும்.

பால்வற்றும் காலம்: பால் வற்றும் காலம் என்பது சினையாக உள்ள பசுக்களில் எட்டுமாத காலத்தில் பால் கறவையை நிறுத்தி அடுத்த கன்று பிறக்கும் வரை ஓய்வளிப்பதாகும். சினைப்பசுக்களுக்கு ஓய்வளிப்பதால் பிறக்கப்போகும் கன்று ஆரோக்கியமாக வளர்வதுடன் அடுத்த கறவையில் பால் உற்பத்தி முறையாக இருக்கும். அதிக பால் கரக்கும் பசுக்களில் கறவையை நிறுத்தும் சமயத்தில் பால் கறவையை நிறுத்தக்கூடாது. இவ்வாறு நிறுத்துவதால் பால் மடியில் பாதிப்புகள் ஏற்படும். எனவே இத்தகைய பசுக்களில் பால் கறவையை படிப்படியாக நிறுத்த வேண்டும். முதலில் சில நாட்கள் ஒருசேர கறவையை நிறுத்தும் சமயத்தில் அவற்றிற்கான தீவனத்தினைச் சற்று குறைப்பதன் மூலம் பால் உற்பத்தியை குறைக்க முடியும்.

<u>நெல்லுக்கு மேல் உரமாக இயற்கை உரங்களில் பயன்படுத்துதல்</u>: இரண்டுமுறைகளில் மேல் உரமாக ஒரு ஏக்கர் நிலத்துக்கு 400 கிலோ முதல் 700 கிலோ தொழுஉரம் அல்லது மண்புழு உரத்தோடு 80 கிலோ வேப்பம்புண்ணாக்கு, ஒருகிலோ அசோபாஸ் அல்லது தலா 500 கிராம் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றைக் கலந்து ஒருநாள் வைத்திருந்து தூவ வேண்டும். மேல் உரம் கொடுத்து 10 முதல் 15 நாட்களுக்கு பிறகு, வேளாண்மைத்துறை வெளியிட்டிருக்கும் "பச்சைவண்ண அட்டையைப் (லீப் கார்டு) பயன்படுத்தி இலைகளின் நிறத்தைப் பார்க்க வேண்டும். அதில் மூன்றாம் எண்ணுக்கு குறைவாக இருந்தால் மட்டும் மீண்டும் ஒருமுறை அதே உரக் கலவையைத் தெளிக்க வேண்டும்.

நெற்பயிரின் வளர்ச்சிக்கு இயற்கை முறை: மாதம் ஒருமுறை 20 லிட்டர் அமுதக்கரைசல் அல்லது 200 லிட்டர் ஜீவாமிர்தக் கரைசலை தண்ணீருடன் கலந்து விடலாம். பயிரின் வளர்ச்சியைப்பொறுத்து 25 மற்றும் 30ம் நாட்களில் மட்டும் 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மிலி "பஞ்சகவ்யா' என்ற அளவில் கலந்து தெளிக்கலாம். அமுதக்கரைசல் தயாரிக்கும் முறை: மாடு ஒருதடவை போட்ட சாணம் (எந்த மாடாக இருந்தாலும் பயன்படுத்தலாம்). ஒரு தடவை பெய்த மாட்டுச் சிறுநீர்

இவற்றை ஒரு பிளாஸ்டிக் வாளியில் எடுத்துக் கொண்டு அதில் ஒரு கைப்பிடி வெல்லம், ஒரு குடம் தண்ணீர் ஆகியவற்றை சேர்க்க வேண்டும். 24 மணி நேரம் நிழற்பாங்கான இடத்தில் வைக்க வேண்டும். இப்போது அமுதக்கரைசல் தயார். ஒரு பங்கு அமுதக்கரைசலுடன் 10 பங்கு தண்ணீர் சேர்த்து பயிர்களுக்கு தெளிக்கலாம். தெளிப்பானில் (டேங்க்) ஒருமுறை தெளிப்பதற்கான அளவு ஒரு ஏக்கருக்கு 10 தெளிப்பான் தெளிக்க வேண்டும். வாய்க்கால் நீரிலும் கலந்து விடலாம்.

- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

## பயறு வகைப் பயிர்களுக்கு ஊட்டச்சத்துக் கரைசல்



பயறு வகைகளில் புரதச்சத்து (20-24 சதம்) இருக்கின்றது. புரதச்சத்தின் மாற்றத்திற்கு மணிச்சத்து அவசியம். மணிச்சத்து மண்ணிலிருந்து கிடைப்பதை விட இலை வழியாக எளிதாக கிடைக்கிறது. மேலும் பயிர்கள் பூக்கும் பருவத்திற்குப் பிறகு வேர்களில் ஊட்டச்சத்து எடுக்கும் தன்மை குறைந்து விடும். இத்தகைய நிலை நெல்தரிசு பயிர்களில் காணப்படுகிறது. ஆகையால் தழைச்சத்து மற்றும் மணிச்சத்து கொண்ட டிஏபி கரைசலைத் தெளிப்பதன் மூலம் இலை வழியாக இவை உள்ளே சென்று பயனளிக்கிறது. பூக்கள் பூத்தபின் இலைகளில்

உற்பத்தியாகும் மாவுச்சத்து விதையில் சேமிக்கப்படுகிறது. யூரியா வழியாக கிடைக்கும். தழைச்சத்து இலைகளைப் பச்சையாக வைத்திருந்து அதிக மாவுச்சத்து உற்பத்திற்கு உதவி செய்கிறது. பொட்டாஷ் உரம் இடுவதால் பயிரில் பூச்சி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. மணியின் எடையைக் கூட்டுகிறது. ப்ளோனோபிக்ஸ் வளர்ச்சி ஊக்கி பூ பிஞ்சுகள் உதிர்வதைத் தடுக்க அதிக காய்கள் பிடிக்க உதவுகிறது.

டிஏபி, யூரியா, பொட்டாஷ் மற்றும் ப்ளோனோபிக்ஸ் வளர்ச்சி ஊக்கி ஆகியவற்றின் கலவை தயார் செய்து தெளிப்பதன் மூலம் கூடுதல் விளைச்சலையும் லாபத்தையும் பெறலாம். இதற்கு ஒரு ஏக்கருக்கு தேவையான டிஏபி 4 கிலோ, யூரியா 2 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் ப்ளோனோபிக்ஸ் 185 மில்லி ஆகியவை ஆகும். அவற்றுள் டிஏபி உரத்தை முதல் நாள் மாலையில் 10 லிட்டர் நீரில் ஊறவைத்து மறுநாள் அதன் தெளிந்த நீருடன் 190 லிட்டர் நல்ல நீர், யூரியா, பொட்டாஷ் ப்ளோனோபிக்ஸ் ஆகியவற்றை கரைத்து 200 லிட்டர் தெளிப்புக் கரைசல் தயார் செய்து மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும். விதைத்த 25-30 நாளில் (பூக்கும் தருணத்திலும்) பின்பு 15 நாட்கள் கழித்தும் (40-45 நாள்) இருமுறை தெளிக்க வேண்டும். இக்கரைசலைத் தெளிக்க சரியான நேரம் மாலைப்பொழுதுதான். ஏனென்றால் கரைசல் இலைப்பரப்பில் இருக்கும் இலைத்துளை வழியாக உள்ளே செல்ல முடியும். கரைசல் காய்ந்து விட்டால் உள்ளே செல்லாது. எனவே வெயில் நேரத்தில் தெளிக்கக் கூடாது. அதேபோல் இலைகளில் அடிப்பக்கம் கரைசல் நன்றாகப் பரவ வேண்டும் என்பதற்காகக் கைத்தெளிப்பான் மூலம் தெளிப்பது நல்லது. தேவைக்கு அதிகமான டிஏபியை அதாவது இரண்டு சதத்திற்கு மிக அதிகமாக இருக்குமாறு கரைத்து உபயோகித்ததால் இலைகள் கருகிவிடும். ஆகையால் பரிந்துரை செய்யப்பட்ட அளவை மட்டும் உபயோகிக்க வேண்டும்.

முனைவர். கொ.பாலகிருஷ்ணன்,

மதுரை-625 104.

**மழையால் உயருது வெங்காயம் விலை**

**திண்டுக்கல்**: மழையால், திண்டுக்கல் மார்க்கெட்டில், வெங்காய விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. திருப்பூர், தாராபுரம், ஒட்டன்சத்திரம் பகுதியில் இருந்து, தினமும், 150 டன் சின்ன வெங்காயமும், மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா மாநிலங்களில் இருந்து, தினமும், 160 டன் பெரிய வெங்காயமும், திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வருகின்றன. இங்கிருந்து, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளுக்கும், வெங்காயம் ஏற்றுமதியாகின்றன. தற்போது, மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. இதனால், திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு வரும் வெங்காயத்தில் பாதி, அழுகி விடுகிறது. அவற்றை வியாபாரிகள், கழிவுகளாக ஒதுக்கி விடுவதால், விலை உயர்ந்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன், கிலோ, 10 ரூபாய்க்கு விற்கப்பட்ட பெரிய வெங்காயம், 18 ரூபாய்க்கும், 16 ரூபாய்க்கு விற்கப்பட்ட சின்ன வெங்காயம், 22 ரூபாய்க்கும், விற்கப்படுகிறது. தென்மேற்கு பருவமழை துவங்க வாய்ப்புள்ளதால், வெங்காயத்தின் விலை, மேலும், உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சர்க்கரை மீதான இறக்குமதி வரியை40 சதவீதமாக உயர்த்த கோரிக்கை**




**புதுடில்லி** ;சர்க்கரை மீதான இறக்குமதி வரியை, 15லிருந்து, 40 சதவீதமாக உயர்த்த வேண்டும் என, மத்திய அரசுக்கு, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா) கோரிக்கை விடுத்து உள்ளது.சர்க்கரை இறக்குமதி அதிகரித்தால், உள்நாட்டில், அதன் விலை மேலும் வீழ்ச்சி காணும். இதை தடுக்கும்

நோக்கில், சர்க்கரை இறக்குமதி மீதான வரியை, 40 சதவீதமாக உயர்த்த வேண்டும்.மேலும், இத்துறையின் வளர்ச்சிக்கு, நிலையான கொள்கை திட்டங்களையும் அறிவிக்க வேண்டும்.

இதனால், சர்க்கரை ஆலைகள் மட்டுமின்றி, 5 கோடி விவசாயிகளும் பயன்பெறுவர் என, இஸ்மா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.நடப்பு சந்தைப் பருவத்தில் (அக்., – செப்.,), நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.42 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியுடன் (2.51 கோடி டன்) ஒப்பிடும் போது, 4 சதவீதம் குறைவாகும்.நடப்பு மே மாதம் 15ம் தேதி வரை, 2.39 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.உள்நாட்டில், சர்க்கரை பயன்பாடு, ஆண்டுக்கு, 2.30 – 2.35 கோடி டன் என்ற அளவில் உள்ளது.

## <u>உணவு தானிய கையிருப்பு7 கோடி டன்னை தாண்டும்</u>



**புதுடில்லி** ;அரசின் முகமை அமைப்புகளிடம் உள்ள உணவு தானிய கையிருப்பு, வரும் ஜூன் மாதத்தில், 7 கோடி டன்னை தாண்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது.எனினும், இது கடந்தாண்டின் இதே மாதத்தில் காணப்பட்ட, 7.70 கோடி டன் கையிருப்பை விட குறைவாகும்.நடப்பு மே 15ம் தேதி நிலவரப்படி, இந்திய உணவு கழகம் உள்ளிட்ட, அரசு முகமை அமைப்புகளிடம், 6.22 கோடி டன் உணவு தானியம் கையிருப்பில் உள்ளது.இதில், கோதுமை, நெல் ஆகியவற்றின் கையிருப்பு முறையே, 4.18 கோடி டன் மற்றும்

2.04 கோடி டன் என்ற அளவிற்கு உள்ளது. இவை தவிர, ஆலைகளிடம், 80 லட்சம் டன் நெல், அரவைக்காக உள்ளது.மொத்த உணவு தானிய கையிருப்பில், 3.20 கோடி டன், இந்திய உணவு கழகத்திடமும், 3.02 கோடி டன், இதர முகமை அமைப்புகளிடமும் உள்ளன.

## ஆந்திர அரிசி 3,600 டன் வருகை

தமிழக அரசின், பொது வினியோகத் திட்டத்திற்காக, ஆந்திராவில் இருந்து வரவழைக்கப்பட்ட, 3,600 டன் புழுங்கல் அரிசி, நேற்று, நாமக்கல் ரயில் நிலையத்திற்கு வந்தடைந்தது. அங்கிருந்து, 100க்கும் மேற்பட்ட லாரிகள் மூலம், எடுத்துச் செல்லப்பட்டு, நாமக்கல் - திருச்சி சாலை, நல்லூர் அருகே உள்ள குடோனில் அடுக்கி வைக்கப்பட்டது.

## மீனவர்களுக்கு தடைகால நிவாரண தொகை

மாமல்லபுரம் : காஞ்சிபுரம் மாவட்ட மீனவர்களுக்கு, மீன்பிடி தடைகால நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், கொட்டிவாக்கம் முதல் ஆலம்பரைகுப்பம் வரை, 42 மீனவ கிராமங்கள் உள்ளன. மீன் இனப்பெருக்கத்திற்காக, ஆண்டுதோறும் ஏப்ரல் 15ம் தேதி முதல், மே 29ம் தேதி வரை, கடலில் மீன் பிடிக்க தடைவிதிக்கப்படுகிறது.

இந்த காலகட்டத்தில், குடும்ப அட்டையுள்ள மீனவர்களுக்கு, தலா 2,000 ரூபாய் நிவாரண உதவியாக அரசு வழங்கி வருகிறது. தற்போது கடந்த மாதம் நடைமுறைப்படுத்தப்பட்ட மீன்பிடி தடை காலம் நாளை முடிகிறது.

இதை ஒட்டி, மாவட்டத்தில் கடந்த ஆண்டு பட்டியலின்படி, 6,025 மீனவர்களுக்கு, தலா 2,000 ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டது.

இதுகுறித்து, மீன்வளத் துறை அலுவலர் கூறுகையில், "தகுதியுள்ள நபர்களை, மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்தால், அவர்களுக்கும் வழங்கப்படும்," என்றார்.

## விரைவில் 7,339 பயனாளிகள் தேர்வு :156 ஊராட்சிகளில் இலவச கால்நடை திட்டம்

**திருக்கழுக்குன்றம்** : காஞ்சிபுரம் மாவட்டத்தில், நடப்பாண்டில் இலவச கால்நடைகள் வழங்கும் திட்டத்திற்காக, 156 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. இதற்காக, 7,339 பயனாளிகளை தேர்வு செய்யும் பணி, விரைவில் துவங்க உள்ளது.காஞ்சிபுரம் மாவட்டத்தில், விவசாயத்திற்கு அடுத்த படியாக, கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. கிராம பகுதிகளை சேர்ந்த பெரும்பாலானோர் கால்நடை களை வளர்த்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாயை கொண்டு, வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

கஉ ஒன்றியங்கள்மாவட்டத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம், சிட்லப்பாக்கம் என, நான்கு இடங்களில் கால்நடைத் துறை உதவி இயக்குனர் அலுவலகங்கள் செயல் படுகின்றன. இவற்றில் காஞ்சிபுரம் அலுவலகத்தின் கீழ் காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதுார், உத்திரமேரூர், வாலாஜாபாத், குன்றத்துார் ஆகிய, 5 ஒன்றி யங்களும், செங்கல்பட்டு அலுவலகத்தின் கீழ் காட்டாங்குளத்துார், திருப்போரூர், திருக்கழுக்குன்றம் ஆகிய 3 ஒன்றியங்களும், மதுராந்தகம் அலுவலகத்தின் கீழ் மதுராந்தகம், அச்சிறுபாக்கம், லத்துார், சித்தாமூர் ஆகிய 4 ஒன்றியங்களும் என, 12 ஒன்றியங்களில் இலவச கால்நடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நடப்பாண்டில், செங்கல்பட்டு கோட்டத்தின் கீழ் உள்ள, 23 கிராம ஊராட்சிகளில், 2,161 நபர்கள், மதுராந்தகம் கோட்டத்தின் கீழ் உள்ள, 53 கிராம ஊராட்சிகளில் 1,766 நபர்கள், காஞ்சிபுரம் கோட்டத்தில், 62 கிராம ஊராட்சிகளில், 2,512 நபர்கள் என, மொத்தம் 138 கிராம ஊராட்சிகளில், 6,439 நபர்களுக்கு ஆடுகள் வழங்கப்பட உள்ளன.

900 நபர்கள் காஞ்சிபுரம் கோட்டத்தின் கீழ், 11 கிராம ஊராட்சிகளில், 550 நபர்களுக்கு மாடுகள் வழங்கவும், மதுராந்தகம் கோட்டத் தில், 7 கிராம ஊராட்சிகளில், 350 நபர்கள் என, மொத்தம், 18 ஊராட்சிகளில், 900 நபர்களுக்கு

கறவை மாடுகள் வழங்கப்பட உள்ளது. இதுகுறித்து, கால்நடைத் துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், "நடப்பு நிதிஆண்டில் இலவச கால்நடை கள் வழங்கும் திட்டத்திற்காக, 156 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 7,339 பயனாளிகளை தேர்வு செய்வதற்கான பணிகள் துவக்கப்பட்டுள்ளன," என்றார்.

## கேழ்வரகு அறுவடை பருவம் கிலோ 30 ரூபாய்க்கு விற்பனை

**ஆர்.கே.பேட்டை** : உடலுக்கு வலிமை தரும் இயற்கை உணவு தயாரிப்பில் முதலிடம் வகிக்கும் கேழ்வரகு அறுவடை, தற்போது நடந்து வருகிறது. கிலோ 30 ரூபாய் என, விற்பனை செய்யப்படுகிறது. தை மாதம் நாற்று விடப்பட்ட கேழ்வரகு, தற்போது அறுவடை செய்யப்படுகிறது. நேரடி விதைப்பு முறை இருந்தாலும், நடவு முறையே பெருமளவில் கடைபிடிக்கப்படுகிறது. தனி சிறப்பான பாத்தி நடவும், நீர் பாய்ச்சுதலும், மற்ற பயிர் ரகங்களில் இருந்து கேழ்வரகு மாறுபட்டது. துரித உணவு கடைகளில் பல சுவையான உணவு ரகங்கள் விற்பனை செய்யப்பட்டாலும், பாரம்பரியமான கேழ்வரகு களி, கூழ் தற்போது சாலையோரங்களில் அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது. காலசக்கரத்தில் மீண்டும் பழமை திரும்பி வருவதை இது உணர்த்துகிறது. இதையடுத்து, கேழ்வரகு கொள்முதல் செய்வதில் வியாபாரிகள் மும்முரமாக ஈடுபட்டு உள்ளனர். இதையடுத்து, கடந்த ஆண்டு கேழ்வரகு கிலோ 25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் கிலோ 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால், கேழ்வரகு பயிர் செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கள்ளக்குறிச்சி பகுதியில் பலத்த மழை பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த பலத்த மழையால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கள்ளக்குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் பகல் முழுவதும் கடும் வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்தது. கடும் வறட்சி நிலவியதால் பல்வேறு இடங்களிலும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து குடிநீர்

மற்றும் விவசாய பாசனத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடும் அவதிக்கு ஆளாகினர். இந்நிலையில் கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில், நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு திடீரென பலத்த மழை பெய்ய துவங்கியது. இரண்டு மணி நேரத்திற்கு தொடர்ந்து பலத்த மழை பெய்ததால், சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்தது. இப்பகுதியில் உள்ள குளம், குட்டை மற்றும் ஏரி போன்ற நீர் பிடிப் பு பகுதியிலும், மழை நீர் தேங்கி நிற்கிறது. இதேபோல் தியாகதுருகம், ரிஷிவந்தியம், கச்சிராயபாளையம், சின்னசேலம், சங்கராபுரம் உள்ளிட்ட சுற்று வட்டார பகுதியிலும் பலத்த மழை பெய்ததால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## விழுப்புரம் மார்க்கெட்டில் மாம்பழம் விற்பனை "ஜோர்'

**விழுப்புரம்**: விழுப்புரத்தில் தரமான மாம்பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளதால், பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். இந்தாண்டு தமிழகம் முழுவதும் மாங்காய் விளைச்சல் அதிகளவு இருந்தது. இருந்தாலும், அக்னி நட்சத்திரம் துவங்கிய அன்றே, பலத்த காற்றுடன் மழை பெய்தது. அதனை தொடர்ந்து, பலமுறை பலத்த காற்றுடன் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் பிஞ்சு மாங்காய்கள் உதிர்ந்து கிழே கொட்டுகின்றன. இவற்றை தோட்ட உரிமையாளர் குறைந்து விலைக்கு விற்கின்றனர். இவற்றை கிராம மக்கள் வாங்கி ஊறுகாய் போட்டு, பதப்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் தற்போது தான், நன்கு விளைந்த மாம்பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. விழுப்புரத்தில் செந்தூரம் ஒரு கிலோ 30 ரூபாய், பங்கனபள்ளி 40 ரூபாய், இமாம் பசன் 70 ரூபாய் மற்றும் ஒட்டு ரகம் 30 ரூபாய் என விற்பனை செய்யப்படுகின்றன. மாம்பழங்கள் தரமாகவும், விலை குறைவாகவும் விற்பனை செய்வதால் பொது மக்கள், ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

## சின்னசேலம் கால்வாய் சீரமைப்பு பணி தீவிரம்

**கச்சிராயபாளையம்**: கோமுகி அணையிலிருந்து சின்சேலம் வரை தண்ணீர் செல்லும் கால்வாய் சீரமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

கச்சிராயபாளையம் அடுத்த கோமுகி அணையின் தண்ணீர், சின்னசேலம் வரை செல்வதற்காக கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கால்வாய் பல ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் இருந்ததால் கால்வாய்க்கு தண்ணீர் செல்வதில் சிக்கல் ஏற்பட்டது. தற்போது நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் 6.5 கோடி ரூபாய் செலவில், சின்னசேலம் கால்வாய் ஆழப்படுத்துதல் மற்றும் புனரமைப்பு பணிகள் துவங்கி, நடந்து வருகிறது. இதனால் கடத்தூர், எலியத்தூர், நமச்சிவாயபுரம் உள்ளிட்ட கிராம விவசாயிகள் பயன்பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

## மக்காச்சோளம் கொள்முதலுக்கு அழைப்பு

**நாமக்கல்:** மக்காச்சோளம் டெண்டர் விடுவது தொடர்பாக, கோழிப்பண்ணையாளருக்கு, தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் நல்லதம்பி அழைப்பு விடுத்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: கர்நாடக மாநில உணவு மற்றும் நுகர்பொருள் வாணிப கழகத்தில், ஏழு லட்சம் டன் மக்காச்சோளம் இருப்பில் உள்ளது. அதனை, வரும், ஜூன், 16ம் தேதி, தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் சங்கத்தின் சார்பில், டெண்டர் எடுக்கப்பட்டு, மலிவு விலையில், பண்ணையாளருக்கு வினியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, அன்றைய டெண்டர் மூலம் மக்காச்சோளம் கொள்முதல் செய்யப்பட்டால், பண்ணையாளர்கள் தேவையான ஒத்துழைப்பு நல்கி, அவரவர் தேவைக்கு ஏற்றப்படி பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கால்நடைத்துறையின் உலர் தீவனக்கிடங்கு திட்டம் விரிவுபடுத்தப்படுமா? மானியத்திட்டத்தால் பல ஆயிரம் கிலோ விற்பனை

**உடுமலை** : தீவனப்புல் உற்பத்தி பாதிப்பிற்கு நிவாரணம் அளிக்க, கால்நடைத்துறையால், துவங்கப்பட்ட உலர் தீவனக்கிடங்கு திட்டத்திற்கு, கால்நடை வளர்ப்போரிடையே வரவேற்பு கிடைத்துள்ளது. உடுமலை வட்டாரத்தில், மேலும் பல இடங்களில் இத்திட்டம் செயல்படுத்த வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

உடுமலை சுற்றுப்பகுதிகளில், பால் உற்பத்திக்காக மாடுகள் அதிகளவு வளர்க்கப்படுகின்றன. இவ்வகை மாடுகளுக்கு, விளைநிலங்களில், பசுந்தீவனமும், வைக்கோல் உட்பட உலர் தீவனங்களையும் கால்நடை வளர்ப்போர் உணவாக வழங்கி வருகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக உடுமலைப்பகுதியில், பருவமழை இல்லாததால், பசுந்தீவன உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டது. மேலும், அமராவதி உட்பட பாசனப்பகுதிகளில், வறட்சியால் நெல் சாகுபடி கைவிடப்பட்டது. நெல் சாகுபடி இல்லாததால், உலர் தீவனமான வைக்கோலுக்கும் தட்டுப்பாடு அதிகரித்தது. பழநி, ஆனைமலை போன்ற பகுதிகளிலிருந்து வைக்கோல் வரத்து முற்றிலுமாக நின்றதால், மாடுகளுக்கு முறையான தீவனம் கிடைக்காமல், பால் உற்பத்தி குறைந்தது. மேலும், குறைந்த விலைக்கு மாடுகளை விற்கும் அவல நிலையும் ஏற்பட்டது. இந்நிலையில், தமிழக அரசு கால்நடை வளர்ப்பு பாதிக்கப்படாமல் இருக்க உலர் தீவனக்கிடங்கு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. உடுமலை வட்டாரத்தில், கால்நடைத்துறை சார்பில், இக்கிடங்கு வாளவாடி கால்நடை மருந்தகத்தில், கடந்த பிப்., மாதம் துவங்கப்பட்டது.

கால்நடை வளர்ப்போர் ரேஷன்கார்டு நகல், இரண்டு போட்டோ மற்றும் விண்ணப்பத்துடன் விண்ணப்பித்தால், 5 மாடுகளுக்கு அதிகபட்சமாக 105 கிலோ வழங்கப்படும். ஒரு கிலோ வைக்கோல் மானியத்தில், 2 ரூபாய்க்கு வழங்கப்படும் என கால்நடைத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. தீவனப்பற்றாக்குறை காரணமாக பாதிக்கப்பட்டிருந்த கால்நடை வளர்ப்போர் இத்திட்டத்தில் பயன்பெற அதிக ஆர்வம் காட்டினர். தற்போது வரை வாளவாடி உலர் தீவனக்கிடங்கில், ஒரு லட்சத்து 45 ஆயிரம் கிலோ வைக்கோல் மானிய விலையில், 1,350 பயனாளிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் உட்பட பகுதிகளிலிருந்து கால்நடைத்துறை சார்பில் கொள்முதல் செய்யப்பட்ட வைக்கோல் தரமாக இருந்ததால், சுற்றுப்பகுதி கால்நடை வளர்ப்போர் அதிகளவு இத்திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர்.

கால்நடைத்துறையினர் கூறியதாவது: உலர் தீவனம் மானியத்தில் வழங்கப்பட்டதால், கால்நடை வளர்ப்போருக்கு போதுமான பலன் கிடைத்தது. கால்நடை வளர்ப்போருக்கு அவர்களது விவரங்கள் அடங்கிய அட்டை தயாரிக்கப்பட்டு, கால்நடைத்துறையால் பராமரிக்கப்படுகிறது. இதனால், ஒரு நபருக்கே தொடர்ந்து தீவனம் வழங்குவது தவிர்க்கப்படுகிறது. தற்போதும்,

வாளவாடி கிடங்கில் வைக்கோல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மழைக்கு பின்னர் பசுந்தீவன உற்பத்தி அதிகரித்துள்ளதால், உலர் தீவன விற்பனை சற்று குறைந்துள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

'கால்நடை வளர்ப்போர் கோரிக்கை' : உடுமலை வட்டாரத்தில், பெதப்பம்பட்டி, மடத்துக்குளம் உட்பட பகுதிகளில் கால்நடை வளர்ப்பு பிரதானமாக உள்ளது. இப்பகுதியைச்சேர்ந்த கால்நடை வளர்ப்போர் வாளவாடிக்குச்சென்று, உலர் தீவனத்தை கொள்முதல் செய்யும் போது, போக்குவரத்து செலவு அதிகரிக்கிறது. எனவே இப்பகுதியில், கூடுதலாக உலர் தீவனக்கிடங்கு கால்நடைத்துறை சார்பில் துவக்கப்பட வேண்டும் என கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆடிப்பட்ட சாகுபடிக்கு எந்த பயிர்களை தேர்வு செய்யலாம்? தோட்டக்கலைத்துறை பதில்

**உடுமலை :** 'தென்னையுடன் ஊடுபயிராக பயிரிட, ஏராளமான உயிர் வேலி மரங்கள் உள்ளன. இவற்றில் நீர்த் தேவைப்படும், வறட்சியிலும் வாடாது வரவு தரும் நீண்டகால மரப்பயிர்களை தேர்வு செய்வது அவசியம்,' என, தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளது.

உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் வெளியிட்ட அறிக்கை: நாற்றங்கால் காய்கறி விதைகள் மூலம் உற்பத்தி செய்ய, நிலவள, நீர்வள திட்டத்தின் கீழ், பெரியகோட்டை கிராமத்தில், மாதிரி கிராம பசுமைக்குடில் அமைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் காய்கறி சாகுபடிக்கு, குழுவாக பதிவு செய்து இதை பயன்படுத்திக் கொள்ளலாம். ஆடிப்பட்டத்தில் நடப்பாண்டு எந்த பயிர்களை சாகுபடி செய்யலாம் என, விவசாயிகள் திட்டமிடுவது அவசியம். கன்றுகளை வெளியில் வாங்குவதா அல்லது தங்கள் தோட்டத்திலேயே தயாரிப்பதா என்பதை முடிவு செய்யவேண்டும்.தோட்டத்தில் தயாரிப்பது என்றால், காய்கறிகளில் தக்காளி, கத்திரி, மிளகாய் சாகுபடிக்கு, தங்கள் தோட்டத்தில் பசுமைக்குடில் அமைத்து,

குழுவாக சேர்ந்த நல்ல நீர் வசதி உள்ள இடத்தில் குழித்தட்டுகள் அமைக்க வேண்டும்.

இதில், நாற்று தயாரிப்பு உத்திகளை கடைபிடிக்க வேண்டும்.தென்னையுடன் ஊடுபயிர், வரப்புப்பயிர் மற்றும் வேலிப்பயிர் செய்ய, ஏராளமான உயிர் வேலி மரங்கள் உள்ளன. இவற்றில் நீர்த் தேவைப்படும், வறட்சியிலும் வாடாது வரவு தரும் நீண்டகால மரப்பயிர்களை தேர்வு செய்ய வேண்டும்.

குறிப்பாக தென்னையின் உட்பகுதிகளில் அதிக நிழல் உள்ள இடத்தில், ஜாதிக்காய், மிளகு, கறிப்பலா ஆகியவற்றை பயிரிடலாம். வெளிச்சம் உள்ள பகுதிகளில் மலர்பயிர்களில் மல்லி, முல்லை மற்றும் கனகாம்பரம் பயிரிடலாம். மேலும், கோழிக்கொண்டை, அரளி, துளசி, சாமந்தி உள்ளிட்டவை வறட்சியிலும் நன்கு வளரும் தன்மை கொண்டவை.

ஓரளவு நிழல் உள்ள தோப்புகளில் வாழை, மல்லிகை, கொத்தமல்லி, புதினா, நெல்லி அல்லது எலுமிச்சை, கொய்யா, சப்போட்டாவும், வளம் மிகுந்த பகுதிகளில் பைனாப்பிள், இஞ்சி, மஞ்சள், ஏலக்காய், மாங்காய் போன்றவற்றையும், நிலப்பகுதிகளில் கொள்ளு, கொத்தவரையும், நீர் குறைவான பகுதிகளில் கொழுக்கட்டைப்புல், குதிரை மசால், வேலி மசால், அகத்தி, செடி முருங்கையும் பயிரிடலாம். மேலும் விபரங்களுக்கு, 98420 07125 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெரம்பலூரில் 120 மி.மீ, மழை

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு, 11 மணி முதல் காலை, 6 மணி வரை, 120 மி.மீ., மழை பெய்தது.

அதன்படி, பெரம்பலூரில் 66 மி.மீ.,யும், செட்டிகுளத்தில் 21 மி.மீயும், பாடாலூரில், 7 மி.மீயும், தழுதாழையில், 4 மி.மீ.,யும், வேப்பந்தட்டையில். 22 மி.மீ., என மொத்தம், 120 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

## உலர் தீவனம் வினியோகம் விலை பட்டியல் தர அழைப்பு

**புதுக்கோட்டை**: கால்நடை துறைக்கு வைக்கோல், சோளதட்டை வினியோகம் செய்ய விரும்புவோர் வரும், 30ம் தேதிக்குள் அதற்கான விலைப்பட்டியலை ஒப்படைக்கலாம். இது குறித்து, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:
புதுக்கோட்டை மாவட்டத்தில், வறட்சியினால் கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பலர், கால்நடைகளை அடிமாட்டு விலைக்கு விற்று வருகின்றனர். இதை தடுக்கும் விதமாக, கால்நடைகளுக்கு தேவையான வைக்கோல், சோளதட்டை போன்ற தீவனங்களை, கால்நடைத் துறை சார்பில், சலுகை விலையில் விற்பனை செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. இதனடிப்படையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் மூலம் விவசாயிகளுக்கு சலுகை விலையில் வைக்கோல், சோளதட்டை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை, கால்நடை மருத்துவமனை மற்றும் கறம்பக்குடி கால்நடை மருந்தகத்துக்கு சலுகை விலையில், விற்பனை செய்வதற்காக வைக்கோல் மற்றும் சோளதட்டை போன்றவற்றை கொள்முதல் செய்து, வினியோகம் செய்ய விரும்புவோர், இதற்கான போட்டி விலைப்பட்டியலை வரும், 30ம் தேதி மாலை, 3 மணிக்குள் மண்டல இணை இயக்குனர், கால்நடை பராமரிப்புத்துறை, புதுக்கோட்டை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். குறைந்த விலைப்பட்டியல் அளித்துள்ளவர்களுக்கு, தீவனம் கொள்முதல் செய்வதற்கான அனுமதி வழங்கப்படும். அவர், ஐந்து சதவீத காப்பீடு தொகைக்கான டி.டி., யை அதே அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருவாரூர் மாவட்டத்தில் ஒரே நாளில் 228.80 மி.மீ., மழை

**திருவாரூர்**: திருவாரூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் கனமழை பெய்தது. அதிகபட்சமாக வலங்கைமானில், 70.40 மி.மீ., மழையும், மாவட்டம் முழுவதும் மொத்தம், 228.80 மி.மீ., மழை பதிவானது.

தமிழகத்தில் கடந்த, 4ம் தேதி அக்னி நட்சத்திரம் துவங்கியது. அன்று, மாநிலத்தில் பல பகுதிகளில் மழை பெய்தது. தொடர்ந்து, இரண்டு நாட்கள் மழை பெய்ததால், அக்னியின் கடுமை வெகுவாக பாதிக்கவில்லை.

நாளை, 28ம் தேதியுடன் அக்னி நட்சத்திரம் முடிவடையும் நிலையில், மாநிலத்தில், பரவலாக மழை பெய்து வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்தது.

திருவாரூர், 3.20 மி.மீ., குடவாசலில், 33.80 மி.மீ., மன்னார்குடி, 36 மி.மீ., முத்துப்பேட்டை, 28.40 மி.மீ., நன்னிலம், 4 மி.மீ., நீடாமங்கலம்,1.20 மி.மீ., பாண்டவையாறு தலைப்பில், 26.80 மி.மீ., அதிகபட்சமாக வலங்கைமானில்,70.40 மி.மீ., மழையுமாக, மாவட்டம் முழுவதுமாக மொத்தம், 228.80 மி.மீ., மழை பதிவானது.

கோடையில், அக்னி நட்சத்திரத்தில் கனமழை பெய்ததால், விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

## மலைப்பகுதியில் மழை: அணைக்கு நீர்வரத்து

**பட்டிவீரன்பட்டி** : தாண்டிக்குடி, பண்ணைக்காடு மலைப்பகுதிகளில் மழை பெய்ததால் மருதாநதி அணைக்கு நீர்வரத்து ஏற்பட்டு உள்ளது. அய்யம்பாளையம் மருதாநதி அணைக்கு நீர்பிடிப்பு பகுதிகளாக பண்ணைக்காடு, தாண்டிக்குடி மலை கிராமங்கள் உள்ளன.

கடந்த மூன்று நாட்களாக இப்பகுதியில் மழை பெய்ததால் அணைக்கு நீர் வரத்து ஏற்பட்டு அணையின் நீர்மட்டம் சிறிதளவு உயர்ந்துள்ளது.

அணையின் உயரம் 74 அடியாகும். சேற்றின் அளவான 10 அடியைக் குறைத்தால் 64 அடி தண்ணீர் தேக்க முடியும். தற்போது அணையில் 37 அடி தண்ணீர் உள்ளது.

அணைக்கு 15 கன அடி நீர் வந்து கொண்டுள்ளது. மேலும் மழை பொழிவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் குமார் தெரிவித்தார்.

## பெரியாறு அணை; ஜூன் 1ல் பாசனத்திற்கு திறக்க பரிந்துரை

**தேனி** : கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக நெல் சாகுபடிக்காக, ஜூன் 1ல் பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும், என அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் பழனிசாமி தெரிவித்தார். தேனி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், கலெக்டர் பழனிசாமி தலைமையில் நடந்தது.

அப்போது, மாவட்டத்தில் முதல்போக நெல் சாகுபடிக்காக முல்லை பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும், என விவசாயிகள் வலியுறுத்தினர். பதில் அளித்த கலெக்டர், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, ஜூன் 1ம் தேதி முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, என தெரிவித்தார்.

விதைகள், விதை நெல், உரங்கள் இருப்பு வைக்கவும், விவசாயிகளுக்கு "சப்ளை' செய்யவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கரும்புக்கு அரசு அறிவித்த விலை டன்னுக்கு ரூ.2626.30 வீதம் கிடைக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வறட்சியால், விவசாயிகள் வங்கிகளில் பெற்ற நகைக்கடனை திரும்ப கட்ட முடியவில்லை.

எனவே, நகைகளை ஏலம் விடாமல் நிறுத்தி வைக்க வேண்டும், என பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. தோட்டங்களில் மின்மோட்டார்கள், மின்கம்பிகள், சொட்டுநீர் பாசன கருவிகள் திருடு போவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, என கலெக்டர் தெரிவித்தார்.

## ராமநாதபுரம் அருகே ரூ.8.50 கோடியில் பாலைவனச்சோலை! தயாராகும் ரம்மியமான மரபணு பூங்கா

**கீழக்கரை :** ராமநாதபுரம் அருகே ரூ.8.50 கோடியில் மரபணு பூங்கா தயாராகி வருகிறது. தோட்டக்கலை துறை சார்பில் பாலைவனச்சோலை போல, பிரமாண்டமாகவும், ரம்மியமாகவும் அமைக்கப்பட்டு வருகிறது. ராமநாதபுரம் திருப்புல்லாணி இடையே கிழக்கு கடற்கரை சாலையில் பால்கரையில் இந்த பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. வெட்டப்பட்ட மரம் போல சிமென்டிலான

முகப்பு பிரம்மிக்க வைக்கிறது. பனை, நீர்நிலைகள் உட்பட பாலை நிலத்தில் உள்ளவை இங்கு தனி சிறப்பாக இடம் பெற உள்ளன.நடந்து செல்ல தனிப்பாதை, கண்ணுக்கு குளிர்ச்சி தரும் கற்றாழை வகைகள், பட்டு ரோஜாக்கள் உட்பட தோட்டக்கலையின் அனைத்து அம்சங்களும் அமைய உள்ளன. ஒன்றன் மேல் ஒன்று ஏறி நிற்கும் ஆமைகள் சிமென்ட்டால் வடிவமைக்கப்பட்டுள்ளன. கண்ணுக்கு விருந்தளிக்கும் இவை தவிர, பசியாற உணவகமும் இடம்பெற்றுள்ளது. ஆற அமர இருந்து இரண்டு மணிநேரத்திற்கு மேல் ரசித்து மகிழ எண்ணற்ற இனங்கள் இடம்பெற உள்ளன.

மேலும் செயற்கையாக வடிவமைக்கப்பட்ட நீர்நிலைகளில் பித்தளையில் செய்யப்பட உள்ள மான்கள் வைக்கப்பட உள்ளன.இதுகுறித்து தோட்டக்கலைத்துறையினர் கூறுகையில்,

""சென்னை தோட்டக்கலை துறையின் மூலம் ராமநாதபுரத்தில் புதுமையாக வடிவமைக்கப்பட்டு வரும் இந்த பூங்காவிற்கு நல்ல தண்ணீர் வசதி இல்லை. செடிகள், பூக்கள் பசுமையாக இருப்பதற்காக நல்ல தண்ணீர் வசதி அருகேயுள்ள கிராமத்தில் இருந்து பைப்லைன் மூலம் கொண்டு வரப்பட உள்ளது.

மேலும் பல புதுமைகள் இங்கு அமைக்கப்பட உள்ளன. சில மாதங்களுக்குள் பயன்பாட்டிற்கு வரும்," என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மீன்பிடி தடை காலம் நாளையுடன் முடிகிறது

### கடலுக்கு மீண்டும் செல்ல விசைப்படகு மீனவர்கள் தயார்



**மணமேல்குடி**: மீன்பிடி தடை காலம் நாளையுடன் நிறைவடைகிறது. இதனால் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல தமிழக மீனவர்கள் ஆயத்தமாகி வருகின்றனர். தமிழக கடலோர பகுதிகளில், மீன்களின் இனப்பெருக்க காலத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் ஏப்ரல் 15 முதல் மே 29ம் தேதி வரை தடை விதிக்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்தாண்டும் விதிக்கப்பட்டது. இதனால், விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடிக்க செல்லமாட்டார்கள். ஆனால் கட்டுமரம் மற்றும் பைபர் படகு மீனவர்கள் மட்டும் கரையிலிருந்து 30 கி.மீ. தொலைவு வரை சென்று மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டதால் அவர்கள் மட்டும் வழக்கம்போல் மீன்பிடித்து வந்தனர். இந்தநிலையில், 45 நாட்கள் தடை காலம் நாளை நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைகிறது.

இதனையொட்டி, தமிழக மீனவர்கள் கடலுக்குச் செல்ல ஆயத்தமாகி வருகின்றனர். தற்போது படகுகள், வலைகளை தயார் நிலையில் வைத்துள்ளனர். தஞ்சை பகுதி மீனவர்கள் நாட்டுபடகு, விசை படகு மீனவர்களிடையே உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி வாரத்தில் திங்கள், புதன், சனி கிழமைகளில்

விசைபடகு மீனவர்களும், மற்ற கிழமைகளில் நாட்டுப்படகு மீனவர்களும் கடலுக்கு செல்வது வழக்கம். தடைகாலம் நாளை நள்ளிரவு முடிந்தாலும், மறுநாள் வெள்ளிக்கிழமை என்பதால் தஞ்சை பகுதி விசைபடகு மீனவர்கள் சனிக்கிழமையான வரும் 31ம் தேதி அதிகாலைதான் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல உள்ளனர். இதற்காக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு செல்ல ஆயத்தமாகி வருகின்றனர்.

தடைக்காலத்தில் வெளிமாவட்டங்களுக்கும், பிற மாநிலங்களுக்கும் மீன் ஏற்றுமதி முற்றிலும் பாதிக்கப்பட்டதால் நாள் ஒன்றுக்கு பல கோடி வரை அரசுக்கு வருமான இழப்பு ஏற்பட்டது. மேலும் விசைப்படகு மீனவர்களும், மீன்பிடி தொழில் சார்ந்த தொழிலாளர்களுக்கும், மீனவர்களுக்கும் வருவாய் இழப்பு ஏற்பட்டது. தடைகாலம் நாளையுடன் முடிவடைவதால் மீனவர்கள், வியாபாரிகள், சிறு, குறு தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அரசுக்கு வருவாய் கிடைக்கவுள்ளது. அனைத்து கடலோர மாவட்ட மீனவர்களும் கடலுக்கு செல்ல உற்சாகத்துடன் உள்ளனர். அதிகளவில் மீன்கள் கிடைக்கும் என எதிர்பார்ப்பில் உள்ளதாக மீனவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். இதனால், உச்சத்தில் இருக்கும் மீன் விலை இன்னும் ஒரு சில நாட்களில் குறையும்.

## <u>45 நாள் தடைக்காலம் முடிகிறது தயார் நிலையில் கடலூர் மீனவர்கள்</u>

**கடலூர்**, : மீன்பிடி தடைக்காலம் வருகிற 29ம் தேதியுடன் முடிவடையும் நிலையில் மீனவர்கள், கடலுக்கு செல்ல ஆயத்தமாகி உள்ளனர்.

ஏப்ரல், மே மாதங்கள் மீன் இனப்பெருக்கத்துக்கு ஏற்ற மாதங்களாகும். எனவே மீன் வளத்தை பாதுகாக்கும் விதமாக தமிழக கடல் பகுதிகளில் ஏப்ரல் 15 முதல் மே 29 ம்தேதி வரை 45 நாட்கள் மீன்பிடி தடைகாலமாக அறிவிக்கப்பட்டது. கடலூர் மாவட்டத்தில் 48 மீனவர் கிராமங்களில் மீனவர்கள் இந்த தடைகாலத்தை ஏற்று மீன்பிடிக்க செல்லவில்லை.

கடலூர் மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்த படியாக மீன்பிடி தொழில் பிரதானமாக இருந்து வருகிறது. 62 கிலோ மீட்டர் கடற்கரையோர பகுதிகளில் 30 ஆயிரம் மீனவர் குடும்பங்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சராசரியாக ஒரு நாளைக்கு 100 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. உயர்ரக மீன்கள், இறால்,

நண்டுகள் வெளிநாடுகளுக்கும், சூறை, மத்தி போன்ற மீன்கள் பல்வேறு மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக, கடலூர் பகுதி ரசாயன தொழிற்சாலைகளால் மீன்வளம் பாதிக்கப்பட்டுள்ளது. குறைந்து வரும் மீன் வளத்தை பாதுகாக்கும் பொருட்டு மீனவர்கள் மீன்பிடி தடைகாலத்தை முழுமையாக கடைபிடித்தனர். இந்த தடை காலத்தில் அவர்கள் தங்கள் விசைப்படகுகளை புதுப்பித்து, பழுது நீக்கி சரி செய்தனர். மீன்பிடி வலைகளில் கிழிந்த பகுதிகளை செப்பனிட்டனர். இன்னும் 3 மாதங்களில் மழைக்காலம் தொடங்குவதால் அதை எதிர்கொள்ளும் விதமாக விசைபடகுகளை தயார் செய்துள்ளனர். இதைப்போல் தங்கள் குடியிருப்புகளையும் சரி செய்தனர். தினமும் கடலில் உயிரை பணயம் வைத்து பல்வேறு சிரமங்களை சந்தித்துவரும் மீனவர்களுக்கு இந்த 45 நாட்கள் தடைகாலம் புத்துணர்ச்சி பெற உதவியாக இருந்ததாக தெரிவித்தனர்.

வருகிற 29ம் தேதியுடன் தடைகாலம் முடிவடைவதால் மீனவர்கள் தங்களின் புதுப்பிக்கப்பட்ட விசைப்படகுகளை வெள்ளோட்டம் விட்டு சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பல மீனவர்கள் தங்கள் குலதெய்வத்திற்கு படையல் இட்டு கடலுக்கு செல்ல தயார் நிலையில் உள்ளனர்.

விரைவில் படகுகள் கடலுக்கு செல்ல இருப்பதால் மீன்பிடி தொழிலை சார்ந்த ஐஸ்பேக்டரிகள், லாரி போக்குவரத்து உள் ளிட்ட பல்வேறு தொழில் களை மேற்கொள்ளும் தொழிலாளர்களும் தொழிற்சாலைகளும் தயாராகி வருகின்றன. 45 நாட்கள் வெறிச் சோடி கிடந்த கடலூர் துறைமுகம் மீண்டும் களை கட்டத் தொடங்கியுள்ளது. புதிய தோற்றத்துடன் தேசிய கொடிகள் படபடக்க விசைப்படகுகள் கடல் பயணத்திற்கு தயாராக உள்ளன.

## மலைவாழ் மக்களுக்கு தோட்டக்கலை தொழில்நுட்ப பயிற்சி

**துறையூர்**, : திருச்சி மற்றும் சேலம் மாவட்டங்களுக்குட்பட்ட பச்சமலை பகுதியில், நபார்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா நிறுவனத்தின் செயலாக்கத்தால் மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மலை வாழ் மக்களுக்கு நிலைத்த வருமானத்தை உருவாக் கிடும் பொருட்டு செயல்படுத்தப்படும் இத்திட்டத் தில், ஒரு விவசாயிக்கு

ஒரு ஏக்கர் நிலத்தில் பழத்தோட்டங்கள் அமைத்து தரப்பட உள்ளது. இத்திட்டப்படி தோட்டக்கலை குறித்த தொழில்நுட்பப் பயிற்சி பச்சமலை யில் வழங்கப்பட்டது.

இப்பயிற்சியை விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் புரு ஷோத்தம்மன் துவக்கி வைத்தார். தோட்டக்கலை துறை பேராசிரியர் ஜீவா, உதவி பேராசிரியர் கெய்சர் லூர்துசாமி, பயிர் மரபியல் துறை உதவி பேராசிரியர் தங்கப்பாண்டியன் ஆகி யோர் தோட்டக்கலைத் தொழில்நுட்பங்கள் குறித்த விளக்கப் பயிற்சி மற்றும் மாதிரி பயிற்சிகள் அளித்தனர். மேலும் முந்திரி மற்றும் மா சாகுபடிகளில் வீரிய ஒட்டு ரக வகைகளை விதை நடவு அறுவடை முடிந்து சந்தைப்படுத்துதல் வரை கடைபிடிக்கவேண் டிய பராமரிப்பு வழிமுறை கள், தண்ணீர் மேலாண்மை மற்றும் பூச்சி தாக்குதல் களை கட்டுப்படுத்த வேண் டிய உரிய வழிமுறைகள் குறித்து செய்முறையுடன் கூடிய விளக்கப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில், பச்சமலைப் பகுதி மலைவாழ் விவசாயிகள் 50 பேர் கலந்து கொண்டனர்.

## கரூரில் 30 ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் தகவல்

**கரூர்**,: கரூர் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 30 ம் தேதி விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடைபெறுகிறது.

விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடத்தப்படுவது குறித்து கலெக்டர் ஜெயந்தி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

கரூர் மாவட்டத்தில் 2014ம் ஆண்டு மே மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் கலெக்டர் தலை மையில் மே 30ம் தேதி ந¬ டபெறவுள்ளது. அன்றைய நாளில், கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், காலை 10.30மணிக்கு விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெறும். எனவே, கரூர் மாவட்ட விவசாயிகள், வி வசாய சங்க உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்க ள் மட்டுமே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## 30ம் தேதி வெண்பன்றி வளர்ப்பு இலவச பயிற்சி

**கரூர்,**: வெண் பன்றி வளர்ப்பு இலவச பயிற்சி குறித்து கால்நடை மருத்துவ பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் அகிலா விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

கரூர் மாவட்டம் பண்டுதகாரன்புதுரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் மே 30ம் தேதி “வெண்பன்றி வளர்ப்பு“ குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெறவுள்ளது. இந்த பயிற்சியில் வெண்பன்றி வளர்ப்பு, கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, பண்ணை பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டு அதனுடன் களப்பயிற்சியும் வழங்கப்பட உள்ளது. மேலும், பயிற்சியில் கலந்து கொள்வோர் காலை 10மணிக்கு பயிறசி மைய வளாகத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் அலுவலக தொலைபேசி 04324-294335 என்ற எண்ணை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழையை பயன்படுத்தி அரியலூர் மாவட்டத்தில் கோடை உழவுபணி தீவிரம்

**அரியலூர்,** : அரிய லூர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த மழையை பயன்படுத்தி கோடை உழவுப்பணி தீவிரமடைந்துள்ளது.

தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் துவங்குவதற்கு முன்னதாகவே கோடை வெயில் பொதுமக்களை வாட்டி எடுத்தது. இதன் காரணமாக கடும் வெப்பத்தால் ஏரி, குளங்களில் நீர் நிலைகள் வற்றிய நிலையில் இருந்தது. மேலும் விவசாய நிலங்கள் வறண்டு காணப்பட்டது. இதைத்தொடர்ந்து வெப்பத்தை தணிக்கும் வகையில் கடந்த 4ம்தேதி முதல் சில தினங்களாக மழை பெய்தது. அரியலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளான திருமானூர் ஒன்றியத்தில் காமரசவல்லி, ஏலாக்குறிச்சி, தூத்தூர், திருமழப்பாடி, குலமாணிக்கம், கண்டிராதித்தம், கீழ்காவட்டான்குறிச்சி, திருமானூர், செம்பியக்குடி ஆகிய பகுதிகளிலும், தா.பழூர் ஒன்றியத்தில் கடம்பூர்,

முட்டுவாஞ்சரி, கோவிந்தப்புத்தூர், அரங்கோட்டை, அணைக்குடி, ஸ்ரீபுரந்தான், அருள்மொழி, மதனத்தூர், வாழைக்குறிச்சி, அடிக்காமலை, குடிகாடு, தென்கச்சி, அண்ணகாரன்பேட்டை, கோடாலிகருப்பூர் ஆகிய பகுதிகளில் தோட்டக்கலை பயிர்களான நிலக்கடலை, செடிமுருங்கை, மக்காச்சோளம், கத்திரி, கரும்பு, மிளகாய், எள் மற்றும் சம்பா நெற் பயிர்களும் பயிரிட்டு வருகின்றனர். இந்நிலையில் கோடை உழவு பணி மேற்கொள்வதற்கு தயார் நிலையில் இருந்த விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் கடந்த சில நாட்களாக போதிய மழை பெய்து. இந்நிலையில் பயிரிட்ட நிலங்களை டிராக்டர் மூலமும், கால்நடைகள் மூலமும் உழவு பணியை தீவிரப்படுத்தி உள்ளனர். கோடை உழவு செய்வதன் மூலம் நிலத்திலுள்ள களைச்செடிகள் முற்றிலும் அழிக்கப்படும். மேலும் நிலத்தை உழுதும்போது மண்ணின் அடிப்பாகத்திலிருந்து தேவையற்ற புழுக்கள் வெளியில் வரும். அப்போது அந்த புழுக்கள் வெப்பத்தில் மயங்கிய நிலையில் இருக்கும்போது பறவைகள் அதை கொத்தி தின்னும். இதனால் மண்ணின் தரம் நன்கு பதப்படுத்தப்பட்டு விவசாயத்திற்கு ஏற்ப தயார் நிலைக்கு வந்துவிடும் என்பதால் முன்கூட்டியே உழவுப்பணியை அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் தொடங்கி உள்ளனர். இதுதவிர அரியலூர், செந்துறை, ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளிலும் உழவுப்பணியை விவசாயிகள் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

**கோடை காலத்தில் கொட்டுகிறது மழைவேளாண் செழிக்கும்விவசாயிகள் நம்பிக்கை**

**கரூர்,**: இந்த ஆண்டு மே மாதத்தில் பெ ய்து வரும் மழை நம்பிக்கை தரும் வகையில் அமைந்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குளிர்காலம், கோடைகாலங்களில் பெய்யும் மழை யுடன், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை கா லத்தில் பெய்யும் மழை யையும் சேர்த்து ஆண்டு சராசரி மழை கணக்கிடப்படுகிறது. இதில், தென் மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலத்தில்தான் அதிகளவு மழை பெய்து வருகிறது. அடுத்து வந்த தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையும் எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதன் கார ணமாக, ஆறு, குளங்கள் வற ண்டு, நிலத்தடி நீர் மட் டமும் குறைந்தது, இதனால்

கடந்த சில மாதங்களாக கடுமையான குடிநீர் பஞ் சம் ஏற்பட்டது. இதன்பின் இந்தாண்டு ஏப்ரல் வரை குறிப்பிடத்தகுந்த அளவில் மழை பெய்யவில்லை. இத னால் விவசாயிகள் கோடை உழவு உள்ளிட்ட பல்வேறு விவ சதாய பணிகளை தொடங்க முடியாமல் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில், விவசாயிகளுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் இம்மாதம் 6ம் தேதி முதல் 9ம் தேதி வரை கன்னியாகுமரி அருகே ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரண மாக தொ டர்ந்து 3 நாட்கள் 371.90, மி.மீ 411.30 மி.மீ மற்றும் 32.80 மி.மீ மழை பொழிந்து மகிழ்ச்சியளித்தது.

மே மாதம் துவக்கம் மற்றும் இறுதிப் பகுதியில் நம்பிக்கை அளிக் கும் வகையில் மழை பொழி ந்துள்ளதால் இந்த ஆண்டு பருவ மழையும் போதிய அளவு பெய்து விவசாயம் செழிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

## குறைந்த தண்ணீரில் மக்காச்சோளத்தில் அதிக மகசூல் விவசாயிகளுக்கு யோசனை

**சேதுபாவாசத்திரம், :** சேதுபாவாசத்திரம் வட் டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:

சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் 2 ஆண்டுகளுக்கும் மேலாக போதிய மழையின்றி நிலத்தடி நீர் வெகுவாக குறைந்து வரும் நிலையில் கோடையில் நெல் சாகு படியை தவிர்த்து பயறுவகை பயிர்கள், மக்காச்சோளம் சாகுபடி செய்து குறைந்த தண்ணீர் செலவில் தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் அதிக மகசூல் பெற லாம். மக்காச்சோளம் தொழிற்சாலைகளில் மக்காச்சோளம் ஸ்டார்ச், பிரீவர்ஸ், மக்காச்சோளம் மைதா, சிரப், சர்க் கரை, குளுக்கோஸ் போன்ற பல பொருட்கள் தயாரிக்க வும் பயன்படுகிறது. இதில் கோ-1, கே-1, கங்கா-5, கே.எச்-1,2,3, கோ.எச்.எம்-5, எம்-900, எம்.ஹைசெல், சின்ஜென்டா, என்.கே-6240, பயனீர்-30 வி-62, பயனீர்-30, வி-92 மற்றும் பிக்பாஸ் ஆகியன முக்கிய வீரிய ஒட்டு ரகங்களாகும். ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதை மூலம் பூசன நோயை தடுக்க 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோ டெர்மா விரிடி என்ற உயிரியல் பூசான கொல்லியை கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து

விதைக்க வேண்டும். இத்து டன் உயிர் உரவிதை நேர்த்தி செய்ய வேண்டும். ஏக்கருக்கு 500 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ் போ பாக்டீரியாவை ஆரிய வடிகஞ்சியில் கலந்து பூசன விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் அரைமணி நேரம் உளர்த்தி பின் 60 இன்ட் 20 செ.மீ இடைவெளியில் அதாவது பாருக்கு பார் 60 செ.மீ செடிக்குசெடி 20 செ.மீ இடைவெளியில் ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் 4 செ.மீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும். ஒரு ச.மீட்டரில் 8 செடிகளும் ஒரு ஏக்கரில் 32,240 செடிகளும் இருக்குமாறு பயிர் எண்ணிக் கையை பராமரிக்க வேண் டும். சாகுபடிக்கு 119 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 34 கிலோ பொட் டாஸ் இதில் அடியுரமாக மட்டும் 30 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 17 கிலோ பொட்டாஸ் இட வேண்டும். விதைத்த 3 நாட்களுக்கு பின் மண்ணில் போதுமான ஈரம் இருக்கும்போது களைக்கொல்லியான அட்ரசின் 50 சதம் நனையும் தூள்-200 கிராம் அல்லது ஆலாகுளோ 1.6 லிட்டர் என்ற அளவில் 360 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பானில் தெளிக்க வேண்டும்.

ஆரம்ப கட்டத்தில் குருத்துபுழு தாக்குதல் தென்படும். இதை கட்டுப்படுத்த செடிக்கு 2 கிராம் வீதம் பியூரடான் குருணை மருந்தை மணலில் கலந்து செடியின் குருத்தில் விதைத்த 20வது நாள் இடவேண்டும். தேவைக்கேற்ப 6 முதல் 8 முறை நீர்பாசனம் செய்ய வேண்டும். இவ்வாறு தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் ஏக்கரில் 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து ரூ.45,000 வரை வருமானம் பெறலாம்.

## உளுந்து பயிரில் அதிக மகசூல் பெற ஆடுதுறை 5 ரகம் விவசாயிகளுக்கு யோசனை

**சேதுபாவாசத்திரம்**, : உளுந்து சாகுபடியில் 1,000 கிலோ வரை மகசூல் பெற ஆடுதுறை 5 ரகத்தை விவசாயிகள் பயன்படுத்தலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:

பயறுவகை பயிர்கள் மட்டுமே மிக குறைவான காலத்தில் குறைவான தண்ணீரை கொண்டு நிறைவான வருமானத்தை கொடுப்பதோடு மண் வளம் நிலைக்கவும்

உதவியாக இருக்கிறது. நெல் தரிசு வயல்களில் கோடை பருவத்தில் உளுந்து பயிர் சாகுபடிக்கு ஏற்ற தருணமாகும். இதற்கு ஏற்ற ரகம் ஆடுதுறை 5 ஆகும். விதைப்பு செய்தவற்கு முன்பாக விதை மூலம் பரவக்கூடிய வேரழுகல், வாடல் நோய்களை கட்டுப்படுத்துவதற்கு 1 கிலோ விதைக்கு டிரைகோடெர்மா விரிடி என்ற எதிர் உயிர் பூசானம் 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் 10 கிராம் அல்லது கார்பன்டாசிம் 2 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பிறகு பயறுவகை பயிர்களுக்குரிய ரைசோபியம் என்ற நுண்ணுயிர் உரத்தை 200 கிராமுடன் அசோஸ்பைரில்லம் 200 கிராம் என்ற உயிர் உரம் சேர்த்து 160 மில்லி ஆறிய அரிசி கஞ்சியுடன் ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் கலந்து ஒரு நாள் முழுவதும் நிழலில் உலர்த்தி பின்னர் உயிர் உர நேர்த்தி செய்த விதைகளை 24 மணி நேரத்திற்கு பின் விதைப்பு செய்ய வேண்டும்.

இவ்வாறு விதைப்பு செய்யும்போது காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து வேர் முடிச்சுகளில் சேமித்து வைத்துகொண்டு பயிர் வளர்ச்சிக்கு உதவுவதால் தழைச்சத்து இடுவதை குறைத்து கொள்ளலாம். இதனால் சாகுபடி செலவு குறைகிறது. நிலத்தை நன்கு உழுது சமன்படுத்தி நீர் பாய்ச்சுவதற்கு ஏற்ற வகையில் பாத்திகள் அமைக்க வேண்டும். ஏக்கருக்கு 5 டன் தொழு உரத்துடன் 20 கிலோ யூரியா, 50 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 16 கிலோ பொட்டாஷ் கலந்து இட வேண்டும். இதனால் அதிக மகசூல் பெறுவதுடன் மண்ணின் வளம் நிலை நிறுத்தப்படுகிறது. விதைப்பு செய்ய ஏக்கருக்கு 12 கிலோ விதை போதுமானது. விதைக்கும்போது வரிசைக்கு வரிசை 30 செமீ செடிக்கு செடி 10 செமீ இடைவெளியில் ஒரு குழிக்கு 2 விதைகள் வீதம் 2 செமீ ஆழத்தில் விதைப்பு செய்ய வேண்டும். விதைப்பு செய்தவுடன் ஒரு முறையும் 3ம் நாள் மறுமுறையும் அதன்பிறகு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறையும் நீர்பாய்ச்ச வேண்டும்.

முக்கியமாக பூக்கும் தருணத்திலும் காய் பிடிக்கும் தருணத்திலும் நீர் பாய்ச்சுதல் அவசியமாகும். இம்முறைகளை கையாளும்போது ஹெக்டேருக்கு 1,000 கிலோ வரை மகசூல் பெறலாம்.

## **காரைக்காலில் 180 கிமீ தூரத்திற்கு வாய்க்கால் தூர்வாரும் பணி தொடங்கியது**

**காரைக்கால்,** : காரைக்காலில் ரூ.84 லட்சம் செலவில், 180 கி.மீட்டர் தூரத்திற்கு வாய்க்கால் தூர்வாரும் பணியை, மாவட்ட கலெக்டர் முகமது மன்சூர் நேற்று

தொடங்கி வைத்தார். காரைக்கால் மாவட்ட பகுதிகளில் விவசாய பணிகள் செம்மையாக நடைபெற ஏதுவாக ஆண்டுதோறும் ஆறு, வாய்க்கால்களை மாவட்ட பொதுப்பணித்துறை தூர் வாரி வருகிறது.

நடப்பாண்டுக்கான தூர்வாரும் பணி, கிராம பாசன சங்களை கொண்டு, ரூ.84 லட்சம் செலவில், 180 கி.மீ தூரத்திற்கு நடைபெறவுள்ளது. இதற்கான பணியை, திரு.பட்டினம் பாசன வாய்க்காலில் மேலையூர் கிராம பாசன சங்கம் மூலம் நேற்று தொடங்கப்பட்டது. மாவட்ட பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் மனோகர், கண்காணிப்பு பொறியாளர் சண்முகசுந்தரம் முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் முகமது மன்சூர் தொடங்கி வைத்து பார்வையிட்டார். நிகழ்ச்சியில், செயற்பொறியாளர்கள் மாணிக்கவாசகம், ராஜசேகர், உதவிப்பொறியாளர்கள் அசோக்குமார், அன்பழகன், வீரச்செல்வம், மேலையூர் கிராம பாசன சங்கத்தலைவர் கணபதி மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## 48 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் நாளை நிறைவு கடலுக்கு செல்ல மீனவர்கள் ஆர்வம்

**ராமநாதபுரம்,** : மீன்பிடி தடைக்காலம் நாளை முடிவடைகிறது. இதனால் மீனவர்கள் கடலுக்கு செல்ல ஆர்வமுடன் உள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன்பிடி முக்கிய தொழிலாக உள்ளது. ஆயிரக்கணக்கான விசைப்படகுகள், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள், நூற்றுக்கணக்கான கட்டுமரங்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றன. ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம், கீழக்கரை, ஏர்வாடி, தேவிபட்டினம், தொண்டி உள்ளிட்ட பகுதிகளில் இத்தொழிலில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தொழில் அனுபவமிக்கவர்கள் படகு மூலம் ஆழ்கடலுக்கு சென்று மீன்பிடித்து வருகின்றனர். மீன்வளத்தை பாதுகாக்க வசதியாக ஒவ்வொரு ஆண்டும் 48 நாட்கள் கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்படும். இந்த ஆண்டுக்கான தடைக்காலம் மே 29ம் தேதியுடன் (நாளை) முடிகிறது. தடை காலத்தில், நாட்டுப் படகுகள், கட்டுமரங்களில் மட்டுமே மீன்பிடி நடக்கிறது. இதுதவிர கடற்கரையோரம் இளம் மீனவர்கள் கரைவலைகளை பயன்படுத்தி சிறியவகை மீன்களை பிடித்து ஜீவனம் நடத்தி வருகின்றனர். கடலில் மார்பளவு நீர்மட்டம் பகுதிவரை வரை சென்று,

வலைகளை போ ட்டு மீன்பிடிக்கின்றனர். இதில் சிக்கும் சிறியவகை மீன்களை விற்று பிழைப்பு நடத்தி வருகின்றனர். கரைவலை மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் கூறு கையில், `ஆண்டுக்கு 48 நாள் மீன்பிடி தடைக்காலமாக அறிவிக்கப்பட்டுள் ளது. இந்த காலத்தில் விசைப் படகுகள் பயன்பாடு இல்லை என்ப தால், அவற்றில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்படும். எங்களுக்கு வேறு தொழில் தெரியாததால், தடைக்காலத்தில் கடற்கரையோரம், பாய்ச்சுவலை மற்றும் வீச்சுவலைகளை பயன்படுத்தி மீன்பிடித்து வருகிறோம். இதில் வீட்டு தேவைக்கு போதிய அளவில் மீன்கள் கிடைத்து விடுகிறது. வீட்டு தேவைக்கு போக எஞ்சிய மீன்களை விற்பனை செய்துவிடுவோம். இந்த ஆண்டுக் கான மீன்பிடி தடைக்கா லம் நாளை நிறைவடைகிறது. இதனால் விசைப்படகில் மீன்பிடிக்கு செல்ல மிகுந்த ஆர்வமுடன் உள்ளோம் என்றனர்.

**குறைந்த விலைக்கு மக்காசோளம் வினியோகம்**

**நாமக்கல்**, :தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பி வெளியிட்டுள்ள அறிக்கை:

கோழி தீவனம் மூலப்பொருளான மக்காசோளம் தற்போது ஒரு டன் ரூ.14 ஆயிர த்து 800க்கு பண்ணையாளர்கள் கொள்முதல் செய்து வருகின்றனர். இந்த விலை அதிகமாகும். மக்காசோளத்தை இடைத்தரகர்கள் இருப்பு வைத்து வருவதால் தான் விலை அதிகமாக இருக்கிறது.கர்நாடக மாநிலத்தில் உள்ள உணவு மற்றும் நுகர்வோர் வாணிப கழகத்தில் சுமார் 7 லட்சம் டன் மக்காசோளம் இருப்பில் உள்ளது. இந்த மக்காசோளத்தை சங்கத்தின் மூலம் டெண்டர் எடுத்து, அடுத்த மாதம் பண்ணையாளர்களுக்கு வினியோகம் செய்யப்பட உள்ளது. மார்க்கெட் விலையை விட குறைந்த விலைக்கு சங்கத்தின் சார்பில் கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, கோழிப்பண்ணையாளர்கள் தங்களது தேவைக்கேற்ப மக்காசோளத்தை பெற்று கொள்ளலாம். இவ்வாறு தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பி தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வாட்டி வதைத்த அக்னி வெயில் இன்றுடன் விடை பெறுகிறது படிப்படியாக வெயில் குறைந்து பருவமழை தொடங்க வாய்ப்பு**



**சென்னை,**

வாட்டி வதைத்த அக்னி வெயில் இன்றுடன் விடை பெறுகிறது. படிப்படியாக வெயில் குறைந்து, பருவமழை தொடங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

**கத்திரி வெயில்**

இந்த மாதம் 4–ந் தேதி தொடங்கிய அக்னி நட்சத்திரம் என்று சொல்லக்கூடிய கத்திரி வெயில் ஆரம்பத்தில் மழையுடன் தான் தொடங்கியது. ஆனால் அதற்கு பின்னர் வெயிலின் தாக்கம் அதிகரித்து பொதுமக்களை வாட்டி வதைக்க தொடங்கியது. பெரும்பாலான நகரங்களில் வெயிலின் அளவு 100 டிகிரியை தாண்டியது. குறிப்பாக சென்னை, வேலூர் போன்ற நகரங்களில் 105 டிகிரிக்கு மேல் வெயில் வறுத்து எடுத்தது. அதிகபட்சமாக 23–ந் தேதி சென்னையில் 109 டிகிரி வெயில் பதிவாகியது. இது கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்ச

வெயில் ஆகும். இதனால் பகல் நேரத்தில் வெளியில் செல்வதையே தவிர்த்து பலர் வீடுகளிலேயே முடங்கி கிடந்தனர். சிறுவர்களும் விளையாட செல்லாமல் வீட்டிலேயே டி.வி. முன்னால் அமர்ந்து பொழுதை கழித்தனர்.

**இன்றுடன் நிறைவு**

தமிழக மக்களை 24 நாட்கள் வாட்டி வதைத்த அக்னி நட்சத்திரம் இன்றுடன் (புதன்கிழமை) விடை பெறுகிறது. இனிவரும் நாட்களில் படிப்படியாக வெயிலின் அளவு குறையும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.அதே நேரத்தில் தென்மேற்கு பருவமழையும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் தொடங்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. எனவே பருவமழை தொடங்கும்போது, தமிழகத்தில் வெயிலின் அளவு வெகுவாக குறைய வாய்ப்பு இருக்கிறது. அக்னி நட்சத்திரத்தின் இறுதிக்கட்டமான நேற்றும் சென்னை, திருச்சி, வேலூர் ஆகிய நகரங்களில் வெயிலின் அளவு 100 டிகிரியை தாண்டி இருந்தது. அதிகபட்சமாக சென்னை மீனம்பாக்கம் மற்றும் திருச்சியில் 101.84 டிகிரி வெயில் கொளுத்தியது.

**45 நாள் மீன்பிடி தடை காலம் நாளை இரவுடன் முடிகிறது கடலில் மீன் பிடிக்க விசை படகுகளை தயார் படுத்தும் பணி மும்முரம் ஐஸ் கட்டி, வலைகள், குடிநீர் கேன்கள் ஏற்றப்படுகின்றன**



**சென்னை,**

45 நாள் மீன்பிடி தடை காலம் நாளை இரவுடன் முடிவடைவதால், வங்க கடலில் மீன்பிடிக்க செல்ல விசை படகுகளை தயார்படுத்தும் பணியில் மீனவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

மீன்பிடி தடை காலம்

மீன்களின் இனப்பெருக்கத்திற்கு சாதகமான காலம் என்று ஏப்ரல், மே மாதங்கள் கணக்கிடப்பட்டுள்ளதால், ஆண்டுதோறும் ஏப்ரல் 15-ந் தேதி முதல் மே மாதம் 29-ந் தேதி வரை வங்க கடலில் மீன்பிடிக்க 45 நாட்கள் தடை விதிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இந்த ஆண்டும் தமிழகம், ஆந்திராவில் உள்ள கிழக்கு கடற்கரை பகுதியில் மீன்பிடி தடைக்காலம் அமலில் இருக்கிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் 15 ஆயிரம் விசை படகுகள் கடலுக்குள் செல்லாமல் கரையில் ஓய்வெடுத்தன.

மீனவர்கள் மும்முரம்

மீன்பிடி தடை கால நாட்களில், விசை படகுகளில் உள்ள பழுதுகளை சரி செய்வது, வர்ணம் தீட்டுவது, வலைகளில் உள்ள கிழிசல்களை தைப்பது போன்ற பணிகளில் மீனவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், 45 நாள் மீன்பிடி தடை காலம் நாளை (வியாழக்கிழமை) இரவுடன் முடிவுக்கு வருகிறது.

எனவே, நாளை நள்ளிரவு 12 மணிக்கு மேல் விசை படகுகள் கூட்டம் கூட்டமாக கடலுக்குள் மீன்பிடிக்க செல்லத் தொடங்கும்.

சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் சுமார் 1,000 விசை படகுகள் உள்ளன. தற்போது, இந்த படகுகள் கடலுக்குள் செல்ல தயாராகி வருகின்றன. கடலுக்குள் விசை படகுகளில் தொடர்ந்து ஒரு வாரம் தங்கியிருந்து மீனவர்கள் மீன் பிடிப்பார்கள் என்பதால், அதற்கு தேவையான பொருட்களை படகுகளில் ஏற்றும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஐஸ் கட்டிகள் - வலைகள்

காசிமேடு துறைமுகத்தில் நேற்று, விசை படகுகளில் ஐஸ் கட்டி, வலைகள், குடிநீர் கேன்கள் ஏற்றும் பணியில் மீனவர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். ஒரு சில விசை படகுகளில் கன்வேயர் பெல்ட் மூலம் ஐஸ் கட்டிகள் ஏற்றப்பட்டன. சில படகுகளில் மீனவர்களே இரும்பு கம்பியால் ஐஸ்கட்களை உடைத்து ஏற்றினார்கள். இதுகுறித்து மீனவர் ஒருவர் கூறும்போது, ‘‘45 நாள் மீன்பிடி தடை காலத்திற்கு பிறகு 29-ந் தேதி நள்ளிரவு முதல் மீண்டும் கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல இருக்கிறோம். ஒரு விசை படகில் 9 மீனவர்கள் வரை செல்வோம். எங்களுக்கு தேவையான உணவை படகிலேயே கியாஸ் அடுப்பு மூலம் தயார் செய்துகொள்வோம். அதற்கு தேவையான அரிசி, காய்கறி, பருப்பு, மசாலா போன்ற பொருட்களை எடுத்துச் செல்வோம். காய்கறிகளை ஒருசில நாட்களே வைத்திருக்க முடியும் என்பதால் குறைந்த அளவு காய்கறிகளையே கொண்டு செல்வோம். காய்கறி காலியான உடன், நாங்கள் பிடிக்கும் மீன்களேயே சமைத்து சாப்பிடுவோம்’’ என்றார்.

**புதுப்பாளையம் ஒன்றியத்தில் விதை மணிலா வழங்கும் நிகழ்ச்சி**



**செங்கம்,**

செங்கம் அடுத்த புதுப் பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விதை கிராம திட்டத்தின் மூலம் விவசா யிகளுக்கு மானிய விலையில் மணிலா வழங்கப்படுகிறது. அதன்படி நடந்த நிகழ்ச்சி யில் ஒன்றியக்குழு தலைவர்

மீனாகுமாரி புரு ஷோத்தமன், ஆணையாளர் எஸ்.ராக வேந்திரன், வேளாண்மை உதவி இயக்குனர் செல்வ பாண்டியன், வேளாண்மை அலுவலர் வெங்க டேசன், உதவி வேளாண்மை அலுவலர் முருகன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். மொத்தம் 4 டன் மணிலா விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

**காட்டு யானைகள் ஊருக்குள் நுழைவதை அறிய நவீன கருவி**



**பேரூர்,**

கோவை அருகே மேலும் 4 இடங்களில் காட்டு யானைகள் ஊருக்குள் நுழைவதை அறிந்து கொள்ளும் நவீன கருவி அமைக்கப்பட்டுள்ளது.

டிரிப் ஒயர் திட்டம்

கோவை மாவட்டத்தில் யானைகள் வன எல்லையை தாண்டி கிராமங்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்வதை தடுக்க கோவை மாவட்ட வனத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக தாளியூரில் காட்டு யானைகள் ஊருக்குள் வருவதை அறியும் புதிய கருவி அறிமுகம் செய்யப்பட்டது.காட்டு யானைகள் வன எல்லையை தாண்டி ஊருக்குள் வந்தால் உயரத்தில் பொருத்தப்பட்டுள்ள சிவப்பு விளக்கு எரிய செய்து வனத்துறையினர் மற்றும் கிராமத்தில் உள்ள முக்கிய நபர்களுக்கு செல்போனில் எஸ்.எம்.எஸ். அனுப்பும் டிரிப் ஒயர் எச்சரிக்கை திட்டம் தொடங்கப்பட்டது.

<u>மேலும் 4 இடங்கள்</u>

அதன்படி வன எல்லையில் பொருத்தப்பட்டுள்ள கருவியை அதிக எடையுள்ள மற்றும் 6 அடி உயரமுள்ள எந்த உயரினம் கடந்து சென்றாலும் அது பற்றி அந்த கருவி எச்சரிக்கை செய்து வனத்துறையினருக்கு எஸ்.எம்.எஸ். தகவலை அனுப்பி விடும்.இதை தொடர்ந்து வனத்துறையினர் அந்த இடத்துக்கு சென்று கிராம மக்களை உஷார்படுத்தி காட்டு யானைகளை விரட்டும் பணியில் உடனடியாக ஈடுபடுவார்கள். தாளியூரில் டிரிப் ஒயர் எச்சரிக்கை திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதை தொடர்ந்து தற்போது மதுக்கரை அறிவொளி நகர், வீரபாண்டி, தடாகம் ரோடு உள்ளிட்ட பகுதிகளில் 4 இடங்களில் இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதன் மூலம் காட்டு யானைகள் ஊருக்குள் ஊடுருவுவதை எளிதாக கண்டுபிடித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோவை மாவட்ட வன அதிகாரி செந்தில்குமார் தெரிவித்தார்.

## <u>கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம் கலெக்டர் சுப்பையன் தகவல்</u>

**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் 2 நாட்கள் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெறுகிறது.

<u>கால்நடைகள்</u>

இது குறித்து தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழக முதல்-அமைச்சரால் 15-9-11 அன்று தொடங்கப்பட்ட விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களில் தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஒரு பயனாளிகளுக்கு 4 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வீதம் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது 31 மாவட்டங்களில் 4 லட்சம் பயனாளிகளுக்கு 16 லட்சம் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளும், வெண்மை

புரட்சியை உருவாக்கும் வகையில் 21 மாவட்டங்களில் 36 ஆயிரம் பயனாளிகளுக்கு 36 ஆயிரம் கறவை பசுக்களும் வழங்கப்பட்டுள்ளன.

குடற்புழு நீக்க முகாம்

இதன் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என முதல்-அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். மேலும் பயனாளிகளை ஊக்கப்படுத்தும் வகையில் சிறப்பாக கால்நடைகளை பராமரித்த பயனாளிகளுக்கு தமிழ்புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின்பால் உற்பத்தி திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும் தமிழகம் முழுவதும் வருகிற 30, 31 ஆகிய நாட்களில் கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவபரிசோதனையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது.இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

## விருத்தாசலம் பகுதியில் பலத்த காற்றுடன் கனமழை அதிகபட்சமாக வேப்பூரில் 38 மில்லி மீட்டர் பதிவானது

**விருத்தாசலம்,**

விருத்தாசலம் பகுதியில் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. இதில் அதிகபட்சமாக வேப்பூரில் 38 மில்லி மீட்டர் மழை பெய்தது.

கனமழை

விருத்தாசலத்தில் நேற்று முன்தினம் காலை வெயிலின் தாக்கம் வழக்கம் போல் அதிகளவில் இருந்தது. இரவில், வானத்தில் கருமேகங்கள் திரண்டு, குளிர்ந்த காற்று வீசியது. தொடர்ந்து இரவு 9 மணிக்கு மேல் இடி, மின்னலுடன் மழை பெய்யத் தொடங்கியது.

தொடக்கத்தில் மிதமான அளவில் பெய்த மழை நேரம் செல்ல செல்ல பலத்த காற்றுடன் கன மழையாக கொட்டியது.

இதனால் விருத்தாசலம் ரெயில் நிலையம், பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்த பயணிகள் அனைவரும் பெரிதும் அவதிப்பட்டனர். மேலும் காற்றின் வேகம் அதிகளவில் இருந்ததால் நகர்பகுதி முழுவதிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

<u>வேப்பூரில் 38 மில்லி மீட்டர்</u>

இந்த மழை விருத்தாசலத்தை சுற்றிலும் உள்ள கிராமங்களிலும் நீடித்தது. இதில் அதிகபட்சமாக வேப்பூரில் 38 மில்லி மீட்டர் மழை பதிவானது. காட்டுமயிலூரில் 32 மில்லி மீட்டர், விருத்தாசலத்தில் 23 மில்லி மீட்டர், மேமாத்தூரில் 19 மில்லி மீட்டர் என்ற அளவில் மழை பதிவானது.

கடந்த இரு தினங்களாக விருத்தாசலம் பகுதிகளில் பகலில் வெயிலும், இரவில் மழையும் என்கிற வகையில் பருவநிலை இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் இவ்வாறு பெய்து வரும் மழையால் குறுவை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>**பண்ருட்டியில் பலத்த காற்றுடன் திடீர் மழை**</u>

**பண்ருட்டி,**

பண்ருட்டியில் நேற்று பகல் முழுவதும் கடும் வெயில் அடித்து வந்தது. இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்த நிலையில் இரவு 9 மணியளவில் பண்ருட்டியில் பலத்த காற்று வீசியது. அதனை தொடர்ந்து சிறிது நேரத்தில் மழையும் பெய்ய தொடங்கியது. மழை சுமார் 30 நிமிடங்கள் வரை நீடித்ததால் வாகன ஓட்டிகள் பலரும் மழையில் நனைந்தவாறே சென்றனர். மேலும் பண்ருட்டியில் உள்ள முக்கிய சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. பகலில் ளகடும் வெயில் அடித்த வந்த நிலையில் நேற்று திடீரென மழை பெய்ததால் பொது மக்கள் பலரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**<u>விவசாயிகளுக்கு வழங்கும் இடுபொருட்களுக்கு ஆன் லைன் மூலம் ரசீது வழங்கும் முறை</u>**

**சிவகங்கை,**

விவசாயிகளுக்கு வழங் கும் இடுபொருட்களுக்கு ஆன் லைன் மூலம் ரசீது வழங்கும் முறை ஜூன் 1-ந்தேதி முதல் அமலா கிறது என்று மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தெரிவித் தார்.

இடுபொருட்கள்

சிவகங்கை மாவட்ட வேளாண்மை இணை இயக் குனர் செல்லத்துரை விடுத் துள்ள அறிக்கையில் கூறியிருப் பதாவது:-

விவசாய விரிவாக்க மையங் களில் விதை, உரம் போன்ற இடுபொருட்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இங்கு இடு பொருட்களை வாங்கும் விவ சாயிகளுக்கு வழங்கப்படும் ரசீதுகள் கையால் எழுதி வழங் கப்பட்டு வந்தது. இந்த முறை யில் தவறுகள் நடப்பதாக புகார் கள் வந்தன. இதைத் தொடர்ந்து அரசு ஆன் லைன் மூலமாக ரசீது வழங்கும் முறையை வருகிற ஜூன் 1-ந் தேதி முதல் அறிமுகப்படுத்த உள்ளது.

மேலும் விவசாய துறையில் முதன் முறையாக இந்த திட் டம் அறிமுகப்படுத்தப் படுகி றது. சிவகங்கை மாவட்டத்தை பொறுத்த வரை 2 லட்சத்து 68 ஆயிரம் விவசாயிகள் மட் டுமே தங்களது நிலம் குறித்த விவரங்களை கணினியில் பதிவு செய்துள்ளனர். அவர் களுக்கு மட்டுமே இந்த இடு பொருட்கள் இனி வழங்கப் படும். இதனால் இதனை வேறு யாரும் வாங்கி பயன் படுத்த முடியாது.

நேரடி கண்காணிப்பு

இடுபொருள் தினசரி வினியோகத்தை ஆன்லைனில் பதிவு செய்வதை சிவகங்கை, சென்னை ஆகிய ஊர்களில் இருந்து அதிகாரிகள் நேரடி யாக கண்காணிப்பார்கள். இதனால் தேவைப்படும் இடங்களுக்கு இடுபொருட்கள் வழங்குவது எளிதாகிறது. இந்த முறையில் ரசீது வழங் குவது எளிதாக இருப்பதுடன் வினியோகம் குறித்த விவரத்தையும் எந்த நேரத் திலும் பொதுமக்கள் பெற லாம்.

காலாவதியான இடு பொருட் களை இனி வினி யோகிக்க முடியாது. இந்த திட்டம் விவசாயிகளுக்கு மிக வும் பயனுள்ள திட்டமாகும். மேலும் இதுவரை கணினியில் பதிவு செய்யாத விவசாயிகள் தங்களது நிலம் குறித்த விவரங் களை உடனடியாக பதிவு செய்யலாம். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

மேலும் இந்த திட்டத்தில் மாவட்டத்தில் 12 வட்டார வேளாண்மை அலுவலகங் களில் பணிபுரியும் ஊழியர் களுக்கு ஆன் லைன் மூலமாக ரசீது வழங்கும் பயிற்சியை எல்காட் அமைப்பினர் வழங்கி னர். இணைஇயக்குனர் செல் லத் துரை பயிற்சியை தொடங்கி வைத்தார். உதவி இய்ககுனர் கதிரேசன், எல் காட் நிறுவன மேலாளர் அணு ராதா ரமணன் உள்ளிட்டவர் கள் பயிற்சி அளித்தனர்.